Registered as a NewsPaper

இலவசப் பிரதி

விலை ரூபா:10.00

# ஈழநாதம்

மக்கள் நாளிதழ்

பக்கங்கள்-16

நாதம் 16 | திருவள்ளுவர் ஆண்டு 2036 | ஐப்பசி-10 | 27-10-2005 | வியாழக்கிழமை | ஓசை-252



குமரகுருவில்
தீபாவளித் திருவிழா
20% சிறப்புத் தள்ளுபடி
யுடன் மாபெரும் மலிவு
விற்பனை!
குமரகுரு புடவை
அழகுப் பொருள் வாணிபம்
யாழ்.சாலை, கிளிநொச்சி.
(சீ-12975)

– தமிழ் தேசிய எழுச்சிப் பிரகடனத்திற்கு வலுச்சேர்க்கும் –

# தமிழ்தேசிய எழுச்சி நிகழ்வை முன்னிட்டு வவு.நகர் பெரும் எழுச்சிக்கோலம்!

## ஏற்பாடுகள் யாவும் பூர்த்தி

(வவுனியா)

**வவுனியாவில் தமிழ் தேசிய எழுச்சி நிகழ்வு மிகுந்த உணர்வெழுச்சியுடன் இன்று நடைபெறவுள்ளது. எழுச்சி நாள் ஏற்பாடுகள் அனைத்தும் பூர்த்தியடைந்துள்ள நிலையில் வவுனியா நகரம் எழுச்சிக் கோலம் பூண்டுள்ளது.**

வவுனியா தமிழ்தேசிய எழுச்சிப் பிரகடனத்தை வலியுறுத்தி இன்று மாலை 3.00மணிக்கு வவுனியா நகர சபை மைதானத்தில் நடைபெறவுள்ள தமிழ்தேசிய எழுச்சி நாளுக்கான ஏற்பாடுகள் அனைத்தும் பூர்த்தியடைந்துள்ளதாக ஏற்பாட்டுக் குழுவினர் தெரிவித்துள்ளனர். இத் தமிழ் தேசிய எழுச்சி நாளையொட்டி வவுனியா நகரம் முழுவதும் சிவப்பு, மஞ்சள் கொடிகளால் அலங்கரிக்கப்பட்டுள்ளது. வவுனியாவிலுள்ள வர்த்தக நிலையங்கள் முன்பாக சிவப்பு, மஞ்சள் கொடிகள் பறக்கவிடப்பட்டுள்ளன.

(16ஆம்பக்கம் பார்க்க)

## யுத்த நிறுத்த கண்காணிப்புக் குழு புலிகளுடன் நாளை சந்திப்பு

(அலுவலக செய்தியாளர்)

இலங்கை யுத்த நிறுத்த கண்காணிப்புக் குழுத்தலைவருக்கும் தமிழீழ விடுதலைப்புலிகளுக்கும் இடையிலான சந்திப்பு நாளை கிளிநொச் சியில் நடைபெறவுள்ளது.

நாளை பிற்பகல் 3.30 மணிக்கு கிளிநொச்சியில் அமைந்துள்ள விடுதலைப்புலிகளின் சமாதானச் செயலகத்தில் இச் சந்திப்பு நடைபெறும்.

யுத்த நிறுத்த ஒப்பந்தத்தை மீறும் வகையில் தமிழீழ விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப்பிரதேசத்தில் வேவு நடவடிக்கைகளை மேற்கொண்டிருந்த சமயம் ஆளில்லா

(16ஆம்பக்கம் பார்க்க)

## தமிழ் தேசிய எழுச்சி விழா ஏற்பாட்டுக்குழு செயலகமருகே கைக்குண்டுத்தாக்குதல்!

### - வவுனியாவில் நேற்று மாலை சம்பவம்

(வவுனியா)

வவுனியா பூங்கா வீதியில் அமைந்துள்ள தமிழ் தேசிய எழுச்சி விழா ஏற்பாட்டுக் குழுவின் காரியாலயத்திற்கு அருகாமையில் நேற்று மாலை 4.30 மணியளவில் கைக் குண்டுத்தாக்குதல் ஒன்று இனம் தெரியாத நபர்களினால் மேற் கொள்ளப்பட்டுள்ளது. இந்தத் தாக்குதலை நடாத்தி விட்டு இரண்டு நபர்கள் தப்பித்துச் சென்றார்கள் என்று சம்பவத்தினை நேரில் பார்த்தவர்கள் தெரிவித்தனர். உள்ளூராட்சி காரியாலயத்தின் வளாகத்தின் பின்புறத்தில் விழுந்து இந்தக் குண்டு வெடித்துள்ளது. இந்தக் காரியாலயத்தினையும் தமிழ் தேசிய எழுச்சி மாநாட்டு செயலணி

(16ஆம்பக்கம் பார்க்க)

## இராணுவ ஒட்டுக் குழு தாக்குதல் வாகரையில் போராளி வீரச்சாவு!

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு மாவட்டத்தில் விடுதலைப்புலிகளின் நிர்வாகப்பகுதியான வாகரைப்பிரதேசத்தில் நேற்றுக் காலை 7.15மணியளவில் ஆயுதக்குழுவொன்றினால் மேற்கொள்ளப்பட்ட துப்பாக்கிச்சூட்டில் போராளி ஒருவர் வீரச்சாவைத் தழுவினார்.

கட்டுமுறிவுக் குளத் திற்கு அருகாமையில் கண்காணிப்புப் பணிகளில் ஈடுபட்டிருந்த போராளிகள் மீது இராணுவத்துடன் இணைந்து செயற்படும் ஆயுதக்குழுவினர் இந்தத் தாக்குதலை நடத்தியுள்ளனர்.

துப்பாக்கிச்சூடு நடத்தி விட்டு அருகாமையிலுள்ள சிறிலங்கா இராணுவ முகாமை நோக்கித் தப்பிச் சென்றுள்ளனர்.

— எழுச்சி நாள் ஏற்பாட்டுச் செயலகம் மீது —

## கைக்குண்டுத் தாக்குதல் கோழைத்தனமான செயல்!

(வவுனியா)

தமிழ் மக்களின் எழுச்சியை பொறுத்துக் கொள்ள முடியாதவர்கள் அதனை மழுங்கடிக்கும் நோக்குடன் மேற்கொண்ட கோழைத்தனமான செயலே தமிழ் தேசிய எழுச்சி நாள் ஏற்பாட்டு செயலகம் மீதான கைக்குண்டு வீச்சு சம்பவம் என வவுனியா மாவட்ட அரசியல் துறைப் பொறுப்பாளர் ஞானம் தெரிவித்துள்ளார்.இராணுவக்கட்டுப்பாட்டுப் பகுதியில் விடுதலைப்புலிகள் அரசியல் பணியில் ஈடுபடாத

(16ஆம்பக்கம் பார்க்க)

## ஐரோப்பிய ஒன்றியம் புலிகள் பிரதிநிதிகள் வருகைதர எவ்வித தடையும் விதிக்கவில்லை!

### சட்டவல்லுனர் உருத்திரகுமார்

விடுதலைப்புலிகளின் பிரதிநிதிகள் ஐரோப்பாவிற்கு வருவதற்கு எந்த விதமான தடைகளும் ஐரோப்பிய யூனியன் போடவில்லை. ஆனால் சிங்கள அரச ஊடகங்களும் அவர்களுடன் தொடர்புள்ள ஊடகங்களும் போலியான பிரச்சாரத்தை இது தொடர்பாக மேற்கொள்வதாக தெரிவித்துள்ளார். பிரான்சில் இயங்கிக் கொண்டிருக்கும் ரி.ரி.என் தொலைக் காட்சிக்கு வழங்கிய பிரத்தியேக செவ்வியிலேயே பிரபல சட்டவல்லுனர் உருத்திரகுமார் தெரிவித்துள்ளார்.

கடந்த 24 நாள் பெல்ஜியத்தில் நடைபெற்ற எழுக தமிழ் எழுச்சிப் பேரணியில் கலந்து கொண்டு ஐரோப்

(16ஆம்பக்கம் பார்க்க)

## இராணுவக் கட்டுப்பாடற்ற பகுதியில் வாக்களிப்பதற்கு தடைவிதிக்குக!

### சிறிலங்கா மு.மு. சனாதிபதிவேட்பாளர் வழக்குத்தாக்கல்

(கொழும்பு)

சிறிலங்கா இராணுவக் கட்டுப்பாடற்ற வடக்கு, கிழக்குப் பிரதேசத்தில் வாக்களிப்பதற்குத் தடைவிதிக்குமாறு கோரி வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. சிறிலங்கா முற்போக்கு முன்னணியின் சனாதிபதி வேட்பாளர் பீற்றர் நெல்சன் பெரேரா கடந்த திங்களன்று உயர்நீதிமன்றத்தில் இந்த வழக்கினைத் தாக்கல் செய்துள்ளார். தேர்தல் ஆணையாளர் தயானந்த திஸ்ஸாநாயக்க, பொலிஸ்மா அதிபர் சந்திரா பெர்ணான்டோ, இராணுவத் தளபதி மற்றும் சட்டமா அதிபர் ஆகியோர் இந்த மனுவில் பிரதிவாதிகளாகக் குறிப்பிடப்பட்டுள்ளனர். கடந்த 2002ஆம் ஆண்டில் நடைபெற்ற பொதுத் தேர்தலின் போது ஐரோப்பிய கண்காணிப்பாளர்கள் தேர்தல்கண்காணிப்புப் பணி

(16ஆம்பக்கம் பார்க்க)

## திருமலை இராணுவக் கட்டுப்பாட்டுப்பிரதேசமாகும் ஆனால் இங்கு புலிக்கொடி ஏற்றப்பட்டுள்ளது

### -தேர்தல் பிரச்சாரத்தில் மகிந்த ஆதங்கம்

திருமலை முற்று முழுதாக இராணுவக் கட்டுப்பாட்டுப் பிரதேசம் ஆனால் இங்கு கடந்த சில நாட்களிற்கு முன்னர் விடுதலைப்புலிகளின் கொடி ஏற்றப்பட்டுள்ளது. இவ்வாறு சிறிலங்காப் பிரதமரும் பொ.ஐ.முன்னணி சனாதிபதி வேட்பாளருமான மகிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

திருமலை நகருக்கு தேர்தல் பிரச்சாரத்திற்காக வந்த அவர் இவ்வாறு கூறினார்.

திருகோணமலை நகருக்கு வருவதற்கு முன்னதாக மகிந்த கிண்ணியாவில் பரப்புரைக் கூட்டம் ஒன்றினையும் நடத்தியிருந்தார் எனவும் தெரிய வருகின்றது.திருகோணமலை மக்கெய்சர் விளையாட்டரங்கில் நடைபெற்ற பரப்புரைக் கூட்டத்தில் மகிந்த உரையாற்றுகையில் திருகோணமலை மாவட்டம் மூவின மக்களையும்

(16ஆம்பக்கம் பார்க்க)

## சார்ள்ஸ் கொலையில் கைதான போராளி கோபி விடுதலை

யாழ். சிறிலங்கா பொலிஸ்அதிகாரி சார்ள்ஸ் விஜேவர்த்தன கொல்லப்பட்ட வழக்கில் கைது செய்யப்பட்ட விடுதலைப்புலி உறுப்பினரான கோபி எனப்படும் வீரபாண்டியன் நேற்று புதன் கிழமை பிணையில் விடுதலை செய்யப்பட்டார்.கோபி மீது வழக்குத் தொடருவதற்கு சட்டமா அதிபருக்கு போதுமான சாட்சியங்கள் இல்லை என்று இரகசியப்பிரிவுப் பொலிசார் நீதிமன்றத்திற்கு தெரிவித்தனர். இதையடுத்து இவரை விடுதலை செய்வதற்கு கொழும்பு நீதிமன்ற நீதிபதி உத்தரவிட்டார்.

கடந்த ஆகஸ்ட் மாதம் 4ஆம் திகதி யாழ். இணுவில் பகுதியில் சார்ள்ஸ் விஜேவர்த்தன

(16ஆம்பக்கம் பார்க்க)

## வரிவிளம்பரம்

**புதிய பிரிவுகள் ஆரம்பம்**
**MS.Word,**
**MS-Excel, MS-Access,**
**MS-Powerpoint, Windows.**
**வகுப்புக்கள் ஆரம்பமாகின்றன.**
தொடர்புகளுக்கு:-வின்நெற் கணணி பயிற்சிநிலையம், டிப்போவீதி, கிளிநொச்சி. (சி.13074)

## செயலமர்வு

தரம் 1இல் கல்வி கற்பிக்கும் ஆசிரியருக்கான விசேட செயலமர்வு கிளி/மத்திய கல்லூரியில் 29.30-10.2005 சனி, ஞாயிறு ஆகிய நாட்களில் காலை 8.00 மணி - மாலை 6.00 மணிவரை நடைபெறுமென வலயக்கல்விப்பணிப்பாளர் அறிவித்துள்ளார். தரம் 1 ஆசிரியர் தவறாது கலந்து கொள்ளவும் எனக்கேட்கப்படுகின்றனர். (34)

# முல்லை. மாவட்ட தபால் அலுவலகம் அமைப்பதற்கு காணி இன்மையால் நிதி திரும்பிச்செல்கிறது

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு மாவட்ட தபால் அலுவலகம் அமைப்பதற்கு வடக்கு பிரதிதபால்மா அதிபதியினால் நிதிவழங்கப்பட்ட போதும் அலுவலகம் அமைப்பதற்கான காணி இல்லாதமையினால் இந்நிதி திரும்பும் நிலையிலுள்ளதாக முல்லை மாவட்ட தபாலதிபர் தெரிவித்துள்ளார்.

பிரதி தபால்மா அதிபர் சம்பந்தப்பட்ட திணைக்கள தலைவர்களான முல்லை. மாவட்ட அரச அதிபர், முல்லைமாவட்ட கடற்றொழிலாளர் கூட்டுறவு சங்க சமாசத்தலைவர், கட்டடத்திணைக்கள பொறியியலாளர்களுடன் தொலைபேசியினூடாக தொடர்பினை ஏற்படுத்தியபோதும் இதுவரை எந்த விதமான ஆக்கபூர்வமான நடவடிக்கையும் எடுக்கவில்லை என முல்லை.மாவட்ட தபாலதிபர் கவலை தெரிவித்துள்ளார். வடக்கு பிரதிதபால் அதிபதியான குமரகுருபரன் இது தொடர்பாக முல்லை தபாலதிபரிடம் கவலை தெரிவித்ததோடு இந்நிதி இருமாதங்களில் திரும்பிச் செல்லும் நிலையிலுள்ளதாகவும் தெரிவித்தார். (20)

# மன்னாகண்டல்-முத்துஜயன் கட்டு வீதி சேத முற்றதால் மக்கள் அவதி

(முத்துஜயன் கட்டு)

பருவ மழை- அண்மை நாட்களாக அதிகரித்திருக்கும் நிலையில் மன்னாகண்டல், முத்துஜயன்கட்டு பிரதான போக்குவரத்து வீதிமிக மோசமான முறையில் சேதமடைந்துள்ளது. அதிக மக்கள் பிரயாணிக்கின்ற இவ் வீதி பாவனைக்கு உதவாத முறையில் சேதமடைந்து இருப்பதால் இப் பகுதியில் பல சிறு சிறு விபத்துக்களும் இடம் பெற்று வருவதனைக் காணக் கூடியதாகவுள்ளது.

முத்துஜயன் கட்டு பெரும் பகுதியிலிருந்து தமது விவசாயப் பொருட்களை சந்தைப்படுத்துவதற்கு புதுக்குடியிருப்பு நோக்கிச் செல்லும் விவசாயிகள் இவ் வீதிச் சீர்கேட்டினால் மிகுந்த சிரமத்தை எதிர்கொண்டு வருகின்றனர். இப் பிரதான வீதி கடந்த இரு வருடங்களுக்கு மேலாக புனரமைப்புச் செய்யப்படாது உள்ளமை குறிப்பிடத்தக்கது. (து)

**சலுகை விலையில்**
**யாழ்-கொழும்பு விமானக் கட்டணம்.**
**சலுகை விலையில்**
**கொழும்பு சென்னை விமானக் கட்டணம்.-**
**லண்டனுக்கு 1 kg மிற்கு பார்சல் 600 ரூபா**
**தொடர்புகொள்ள வேண்டிய முகவரி**
MANOJ AIR TOURS PVT LTD
**32 மணிக்கூட்டு வீதி**
**யாழ்ப்பாணம்.**
**0212223916** (சி.13111)

*ஜெனரல் இன்ஜினியறிங் கொம்பனி*
*(துறைசார் ஆலோசனை வழங்குனர், நிர்மாணதாரர்)*

## பணிநிலை வேண்டுகை

கீழ் குறிப்பிடப்படும் பணிநிலைகளிற்கு தகுதியானவர்களிடம் இருந்து வேண்டுகைகள் கோரப்படுகின்றது.

பணிநிலை :- கட்டட தொழில்நுட்பவியல்,
1. படவரைஞர், மதிப்பீட்டாளர்,
2. மேற்பார்வையாளர், நிலஅளவையாளர்.

கல்வித்தகமை :- க.பொ.(சா/த)த்தில் தமிழ், கணிதம், உட்பட 06பாடங்களில் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.

வயதெல்லை :- 20 தொடக்கம் 35 வரை

சம்பளம் :- நேரில் பேசித்தீர்மானிக்கப்படும்.

நேர்முகத்தேர்வு நடைபெறும் இடம :- ஜெனரல்இன்ஜினியரிங் கொம்பனி
45A கனகபுரம் கிளிநொச்சி.

காலம :- 31.10.2005 (திங்கட்கிழமை)
நேரம் :- காலை 10.00

மேற்குறித்த பணிநிலைகளிற்குத் தகுதியானவர்கள் தமது தகைமைச் சான்றிதழ்களுடன் நேரில் சமுகம் தரவும்.

மேலாளர்,
ஆளணிப்பகுதி,
ஜெனரல் இன்ஜினியறிங் கொம்பனி. (சி.13151)

# யாழ்ப்பாணம் பல்கலைக்கழகம்-இலங்கை
## இராமநாதன் நுண்கலைக் கழகம்
### நுண்கலைமாணி (இசை நடனம் சித்திரமும் வடிவமைப்பும்)
### கற்கை நெறிகளுக்கான பல்கலைக்கழக அனுமதி -2005/2006

1. **நுண்கலைமாணி (இசை/நடனம்/சித்திரமும் வடிவமைப்பும்)** பட்டப் படிப்பிற்கான கற்கை நெறிகளுக்கு அனுமதி பெற விரும்பும் கீழ்வரும் தகுதியுடையவர்களிடமிருந்து 18.11.2005 திகதி வரை விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும்.
2. **கற்கைநெறிக்காலம் -நான்கு வருடங்கள்**
3. **அனுமதிக்கான ஆகக் குறைந்த தகுதியும் தகைமைகளும்**

(a) **நுண்கலைமாணி-இசை (வாய்ப்பாட்டு)**

2005 ஆம் ஆண்டு ஜூன் மாத க.பொ.த. உயர்தரப் பரீட்சையில் புதிய பாடத்திட்டத்தின் கீழ் பரீட்சை எடுத்து மானிய ஆணைக்குழு நிபந்தனைகளுக்கு ஏற்ப பல்கலைக்கழகத்திற்கு அனுமதி பெற தகுதி பெற்றுள்ளதோடு ஆகக் குறைந்த தகைமையாக கர்நாடக சங்கீதத்தில் திறமைச் சித்தியும் (C) ஏனைய ஏதாவது இரு பாடங்களில் சாதாரண சித்திகளையும் (S) பெற்ற மாணவர்கள் விண்ணப் பிக்கத் தகுதியுடையோராவர்.

(b) **நுண்கலைமாணி-இசை (வயலின்)**

மேலே (a) இல் குறிப்பிட்ட தகுதியும் தகைமைகளும் பெற்ற மாணவர்கள் விண்ணப்பிக்கத் தகுதியுடையோராவர்.

(c) **நுண்கலைமாணி-இசை (வீணை)**

மேலே (a) இல் குறிப்பிட்ட தகுதியும் தகைமைகளும் பெற்ற மாணவர்கள் விண்ணப்பிக்கத் தகுதியுடையோராவர்.

(d) **நுண்கலைமாணி-இசை (மிருதங்கம்)**

மேலே (a) இல் குறிப்பிட்ட தகுதியும் தகைமைகளும் பெற்ற மாணவர்கள் விண்ணப்பிக்கத் தகுதியுடையோராவர்.

(e) **நுண்கலைமாணி-இசை (பண்ணிசை)**

2005 ஆம் ஆண்டு ஜூன் மாதம் க.பொ.த. உயர்தரப் பரீட்சையில் புதிய பாடத்திட்டத்தின் கீழ் பரீட்சை எடுத்து மானிய ஆணைக்குழு நிபந்தனைகளுக்கு ஏற்ப பல்கலைக்கழகத்திற்கு அனுமதி பெற தகுதி பெற்றுள்ளதோடு ஆகக் குறைந்த தகைமையாக சித்திபெற்ற பாடங்களில் கர்நாடக சங்கீதத்தில் திறமைச் சித்தியும் (C) பின்வரும் பாடங்களில்

**தமிழ்/இந்துநாகரிகம் / இந்துசமயம் / வரலாறு**

ஏதாவதொன்றில் சாதாரண சித்தியும் (S) வேறு ஏதாவதொரு பாடத்தில் சாதாரண சித்தியும் (S) பெற்றுள்ள மாணவர்கள் விண்ணப்பிக்கத் தகுதியுடையோராவர்.

(f) **நுண்கலைமாணி-நடனம் (பரதநாட்டியம்)**

2005 ஆம் ஆண்டு ஜூன் மாதம் க.பொ.த. உயர்தரப் பரீட்சையில் புதிய பாடத்திட்டத்தின் கீழ் பரீட்சை எடுத்து மானிய ஆணைக்குழு நிபந்தனைகளுக்கு ஏற்ப பல்கலைக்கழகத்திற்கு அனுமதி பெறத் தகுதி பெற்றுள்ளதோடு ஆகக் குறைந்த தகைமையாக பரத நாட்டியத்தில் திறமைச் சித்தியும் (C) ஏனைய ஏதாவது இரு பாடங்களில் சாதாரண சித்தியையும் (S) பெற்ற மாணவர்கள் விண்ணப்பிக்கத் தகுதியுடையோராவர்.

(f) **நுண்கலைமாணி-சித்திரமும் வடிவமைப்பும்**

i 2005 ஆம் ஆண்டு ஜூன் மாதம் க.பொ.த. உயர்தரப் பரீட்சையில் புதிய பாடத்திட்டத்தின் கீழ் பரீட்சை எடுத்து மானிய ஆணைக்குழு நிபந்தனைகளுக்கு ஏற்ப பல்கலைக்கழகத்திற்கு அனுமதி பெறத் தகுதி பெற்றுள்ளதோடு ஆகக் குறைந்த தகைமையாக சித்திபெற்ற பாடங்களில் சித்திரக் கலையில் திறமைச் சித்தியும் (C) ஏனைய ஏதாவது இரு பாடங்களில் சாதாரண சித்தியையும் (S) பெற்ற மாணவர்கள் விண்ணப்பிக்கத் தகுதியுடையோராவர்.

அல்லது

ii 2005 ஆம் ஆண்டு ஜூன் மாத க.பொ.த. உயர்தரப் பரீட்சையில் புதிய பாடத்திட்டத்தின் கீழ் பரீட்சை எடுத்து மானிய ஆணைக்குழு நிபந்தனைகளுக்கு ஏற்ப பல்கலைக்கழகத்திற்கு அனுமதி பெறத் தகுதி பெற்றுள்ளதுடன் க.பொ.த சாதாரண தரப் பரீட்சையில் ஆகக் குறைந்த தகைமையாக சித்திரத்தில் திறமைச் சித்தி (C) பெற்ற மாணவர்கள் விண்ணப்பிக்கத் தகுதியுடையோராவர்.

4. மேற்படி கற்கை நெறிகளில் வாய்ப்பாட்டு / வயலின்/ வீணை /மிருதங்கம் /பண்ணிசை பரதநாட்டியம் ஆகிய கற்றைநெறிகளுக்கான தெரி வு யாழ்ப்பாணம் பல்லைக்கழகத்தில் நடாத்தப்படும் ஆற்றுகைப் பரீட்சை நேர்முகப் பரீட்சை ஆகியன உள்ளடங்கிய தகுதிகாண் பரீட்சை மூலம் நடைபெறும்.
5. சித்திரமும் வடிவமைப்பும் கற்கை நெறிக்கு பல்கலைக்கழகத்தால்நடாத்தப்படும் எழுத்துப் பரீட்சை, செயல்முறை பரீட்சை, நேர்முகப் பரீட்சை ஆகியவை உள்ளடங்கிய தகுதிகாண் பரீட்சை மூலம் தெரிவு நடைபெறும்.
6. 2005 ஆம் ஆண்டு நடைபெற்ற க.பொ.த உயர்தரப் பரீட்சையில் பெற்ற Z –புள்ளி மற்றும் சங்கீதம் /நடனம் /சித்திரக்கலை ஆகியவற்றில் பெற்ற தரம் (Grade) க.பொ.த. சாதாரணதர பரீட்சையில் சித்திரத்தில் பெற்ற தரம் (Grade)) ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்டு பல்கலைக்கழக மூதவைஆற்றுகைப் பரீட்சை, நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்பட வேண்டியவர்கள்பற்றி எடுக்கும் தீர்மானத்திற்கு அமையவே விண்ணப்பதாரிகள் இத்தகுதிகாண் பரீட்சைக்கு அழைக்கப்படுவர்.
7. விண்ணப்பதாரி ஒருவர் ஒன்றுக்கு மேற்பட்ட கற்கைநெறிகளுக்கு விண்ணப்பிக்க விரும்பினால் தெரிவு செய்யும் ஒவ்வொரு கற்றை நெறிக்கும் , தனித்தனியான விண்ணப்பப்படிவங்களில் விண்ணப்பிக்க வேண்டும்.
8. விண்ணப்பதாரிகள் அனைவரும் **பாடசாலை அதிபரால் அல்லது சமாதான நீதவானால் உறுதிப்படுத்தப்பட்ட** க.பொ.த. உயர்தரப் பரீட்சை பத்திரத்தின் (Z)பெறுபேறு, பொதுச் சாதாரண வினாத்தாளின் புள்ளிகள், பல்கலைக்கழக அனுமதி பெறும் தகுதி ஆகிய உள்ளடக்கிய) பிரதியொன்றை விண்ணப்பத்துடன் தவறாது இணைத்தல் வேண்டும்.
9. சித்திரமும் வடிவமைப்பும் கற்கைநெறிக்கு 3.(g) (ii) இன் கீழ் விண்ணப்பிப்பவர்கள் பாடசாலை அதிபரால் உறுதிப்படுத்தப்பட்ட க.பொ.த. சாதாரணதர சான்றிதழையும் இணைத்து அனுப்புதல் வேண்டும்.
10. யாழ்ப்பாணம் பல்கலைக்கழகத்தில் மேற்குறிப்பிடப்பட்ட கற்கைநெறிகளில் ஏதாவதொன்றுக்கு தெரிவு செய்யப்பட்டு, பதிவினை மேற்கொண்ட மாணவரொருவர் இனிவரும் ஆண்டுகளிலான க.பொ.த. உயர்தரப் பெறுபேற்றின் அடிப்படையில் (அதாவது 2005 ஆம் ஆண்டின் பின்னர் ) பல்கலைக்கழக அனுமதிகளுக்காக எக்காரணம் கொண்டும் விண்ணப்பிக்க முடியாது என்பதை கவனத்தில் கொள்ளவும்.

விண்ணப்பப் படிவங்களை *யாழ். பல்கலைக்கழக சிறாப்பர் கருமபீடத்திலோ அல்லது மக்கள் வங்கி யாழ். பல்கலைக்கழக கிளையிலோ ரூபா 150* செலுத்திய பற்றுச்சீட்டை பரீட்சைகளும் அனுமதிகளும் கிளையில் சமர்ப்பிப்பதன் மூலம் பெற்றுக்கொள்ளலாம்.

தபால் மூலம் பெற விரும்புவோர் நீதியாளர், யாழ். பல்கலைக்கழகம் என்னும் பெயருக்கு ரூபா 150 பெறுமதியான காசுக் கட்டளையுடன் முத்திரை ஒட்டப்பட்ட சுயவிலாசம் இடப்பட்ட 23X10 செ.மீ அளவுள்ள கடித உறையை *உதவிப்பதிவாளர் பரீட்சைகளும் அனுமதிகளும் கிளை. யாழ்ப்பாணப்* பல்கலைக்கழகம், யாழ்ப்பாணம் எனும் முகவரிக்கு அனுப்புவதன் மூலம் பெற்றுக்கொள்ளலாம்.

விண்ணப்பங்கள் அனுப்பும் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில்விண்ணப்பிக்கும் கற்கைநெறியைக் குறிப்பிட்டு பதிவுத்தபால் மூலம் அல்லது நேரில் கையளித்தல் வேண்டும்.

*விண்ணப்பங்களை அனுப்ப /ஒப்படைக்க வேண்டிய முகவரி*
*உதவிப்பதிவாளர்,*
*பரீட்சைகளும் அனுமதிகளும் கிளை,*
*யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்,*
*யாழ்ப்பாணம்.*

*மேற்குறித்த கல்வித்தகைமைகளுக்கு அமையாத, பூரணப்படுத்தப்படாத மேற்குறிப்பிட்ட ஆவணங்களின் உறுதிப்படுத்தப்பட்ட போட்டோப் பிரதிகள் இணைக்கப்படாத, தெளிவில்லாத, விண்ணப்ப முடிவுத்திகதிக்குள் கிடைக்கப்பெறாத விண்ணப்பங்கள் யாவும் நிராகரிக்கப்படும்.*

*பதிவாளர்,*
*26.10.2005* (சி.13124)

# அமெரிக்க படைகள் ஈராக்கில் தொடர்ந்தும் இருக்கும்

## குர்திஷ் தலைவருடனான சந்திப்பில் புஷ்



(வோஷிங்டன்)

**அமெரிக்க சனாதிபதி ஜோர்ஜ் டபிள்யு' புஷ் மற்றும் குர்திஷ் தலைவருக்கிடையிலான சந்திப்பு வோஷிங்டனில் நேற்று முன்தினம் இடம் பெற்றுள்ளது. இச் சந்திப்பில் ஈராக் குர்திஷ் தான் பிராந்திய அரசின் தலைவர் மசௌட் பசானி கலந்து கொண்டு புஷ்சுடன் விவாதித்தார்.**

ஈராக்கின் புதிய அரசியலமைப்பு தொடர்பாக இந்தச் சந்திப்பின் போது கலந்துரையாடப்பட்டது. ஈராக்கின் புதிய அரசியலமைப்பினை உருவாக்குவதற்கு குர்திஷ் தலைவர் வழங்கும் ஆதரவிற்குத் தான் நன்றி தெரிவிப்பதாக குறிப்பிட்ட புஷ் ஈராக்கில் அமெரிக்கப் படைகள் தொடர்ந்தும் நிலை கொண்டிருக்குமெனத் தெரிவித்தார். ஈராக்கிலிருந்து அமெரிக்கத் துருப்புக்கள் வெளியேறுவதற்கு முன்னதாக மேலும் கூடுதலான அர்ப்பணிப்புக்களை செய்ய வேண்டுமென அமெரிக்க சனாதிபதி கூறியுள்ளார். ஈராக்கில் அமெரிக்கப் படைகள் நிலை நிறுத்தப்பட்டதன் பின்னர் உயிரிழந்த அமெரிக்க துருப்பினரின் எண்ணிக்கை இரண்டாயிரமாக அதிகரித்துள்ள நிலையில் இச் சந்திப்பு இடம்பெற்றுள்ளதை குறிப்பாக அரசியலமைப்பிற்கு எதிராக குரல் கொடுத்த வர்கள் அந் நாட்டில் அமைதியின்மையை ஏற்படுத்தக் கூடும் எனவும் புஷ் குறிப்பிட்டார்.



ஈராக்கில் கடந்த திங்கட்கிழமை கார்க்குண்டுத் தாக்குதல் இடம்பெற்ற ரம்டான் பள்ளி வாசலின் முன் காவல் கடமையில் உள்ள அமெரிக்கப் படையினர்.



கடந்த வாரம் அமெரிக்க விமானத் தாக்குதலில் கொல்லப்பட்ட தம் உறவுகளின் பிரேதப் பெட்டிகளின் முன் நின்று வணக்கம் செலுத்தும் ஈராக்கியர்.

## பாகிஸ்தானில் பூகம்ப நிவாரண பொருட்களை திருடிய 400பேர் கைது

(இஸ்லாமபாத்)

பாகிஸ்தானில் கடந்த எட்டாம் திகதி ஏற்பட்ட பூகம்பத்தில் அனைத்தையும் இழந்து தவிப்பவர்களுக்காகப் பல்வேறு நாடுகளில் இருந்தும் உதவிப் பொருட்கள் வந்த வண்ணம் இருக்கிறது.

மான்ஷிரா மாவட்டத்தில் பாதிக்கப்பட்டவர்களுக்கு வழற்குவதற்காக நிவாரணப் பொருட்கள் குவித்து வைக்கப் பட்டிருந்தன. இந்த நிவாரணப் பொருட்களை ஏராளமானவர்கள் திருடிச் சென்று விட்டனர்.

இன்னும் சில ஊழியர்கள் பாதிக்கப்பட்டவர்களுக்கு வழங்காமல் தாங்களே வைத்துக் கொண்டனர்.

நிவாரணப் பொருட்களை திருடியதாகவும், கடத்தியதாகவும், மோசடி செய்ததாகவும், இதுவரை 400 பேர் கைது செய்யப் பட்டுள்ளனர். அவர்கள் மீது வழக்குப் பதிவு செய்யப்பட்டுள்ளது.

இந்த நிலையில் பாகிஸ்தான் காஷ்மீர் பகுதியில் நேற்று முன்தினம் இரவு 8.30 மணிக்கு மீண்டும் நிலநடுக்கம் ஏற்பட்டது. 5.1 ரிச்டர் அளவில் பதிவான இந்த நிலநடுக்கத்தால் சேதம் ஏற்படவில்லை.

## சதாம் மீதான விசாரணையை ஈராக்கில் நடத்துவதே அமெ.விருப்பம்

(வோஷிங்டன்)

ஈராக்கில் சதாம் ஹுசைன் மீதான விசாரணை நியாயமாக நடக்கும் என்று அமெரிக்க அதிபர் புஷ் தெரிவித்துள்ளார்.

அல்-அராபியா தொலைக்காட்சிக்கு அளித்த பேட்டியில் அதிபர் புஷ் கூறியதாவது:-

மனித இனத்துக்கு எதிராக சதாம் ஹுசைன் செய்த கொடூர செயல்களின் மீதான விசாரணை கடந்த 19 ஆம் திகதி தொடங்கியது. அந்த விசாரணை நவம்பர் 28 ஆம் திகதி ஒத்திவைக்கப்பட்டுள்ளது. இந்த விசாரணை தொடர வேண்டும் ஈராக்கில் சதாம் மீதான விசாரணை நியாயமாக நடக்கும். தொடர்ந்து விசாரணையை மேற்கொள்வதற்குரிய தைரியம் இருக்கின்றதா, இல்லையா என்ற கேள்வி தான் தற்போது அனைவரின் முன்புமுள்ளது.

சதாம் செய்த குற்றங்களின் மீதான விசாரணையை ஈராக் மக்கள் விரும்புவார்கள் என்றே நினைக்கிறேன். சதாம் ஹுசைன் மீது சர்வதேச அளவில் விசாரணை நடத்த வேண்டும் என்ற கோரிக்கையை நான் ஆதரிக்கவில்லை. அதற்கு பதிலாக மக்கள் ஆதரவு பெற்ற நீதி முறை ஈராக்கில் நிலைபெற வேண்டும் என்பதே எனது விருப்பம்.

தற்போது ஈராக்கில் புதிய சனநாயகம் மலர்ந்துள்ளது. அதில் பாதியாக நேர்மையான நீதி விசாரணை இடம் பெற்றுள்ளது. எனவே சதாம் மீதான விசாரணையை நேர்மையாக நடத்தி நேர்மையான நீதிமுறை ஈராக்கிலுள்ளது என்பதை அந் நாட்டு மக்கள் உலகுக்கு வெளிப்படுத்துவர். சதாம் தரப்பு வழக்கறிஞர் ஒருவர் கொல்லப்பட்டதால் வழக்கு விசாரணையில் தொடர்ந்தும் ஈராக்கிலேயே நடைபெறும் எவ்வித தொய்வும் ஏற்பட்டு விடாது. விசாரணை தொடர்ந்து ஈராக்கிலேயே நடக்க வேண்டும் இவ்வாறு அதிபர் புஷ் கூறியுள்ளார்.



அமெரிக்காவில் புளோரிடா மாநிலத்தில் வில்மா புயல் தாக்கியதில். அங்கு பெரும் சேதம் ஏற்பட்டுள்ளது. அங்குள்ள நார்த்பே கடற்கரையில் படகுத் துறையிலும், அங்குள்ள படகுகளும், புயலில் சிக்கி சின்னா பின்னமாக கிடக்கும் காட்சி. புயல் இன்னமும் ஓயாத நிலையில் ஆல்பா என்ற புயல் ஹைத்தி தீவில் 11 உயிர்களை எடுத்தது. இந்தப் புயலும் அமெரிக்காவை நோக்கி நகர்கிறது.

## தமிழகத்தில் மழை தொடர்கிறது பல கிராம மக்கள் வெள்ளத்தில்

(சேலம்)

தமிழகத்தில் மழை தொடர்வதால் மேலும் பல பகுதிகள் வெள்ளத்தில் மூழ்கி வருகின்றன. தமிழகம் நாமக்கல் மாவட்டம், பள்ளிப்பாளயம், குமார பாளயம் ஒருவந்தூர் ஆகிய பகுதிகள் முழுமையாக வெள்ளக்கடாய் காட்சியளிப்பதாக தமிழக செய்திகள் தெரிவிக்கின்றன.

பருவ பழையின் தீவிரம் அண்மைய நாட்களாக தமிழகத்தில் பெரும் சேதத்தை ஏற்படுத்தி வருகின்றன. தமிழக கரையோரப் பகுதி மக்கள் பெரும் அவல நிலைக்குள் தள்ளப்பட்டுள்ளனர். பல ஆயிரம் வீடுகள் நீரில் மூழ்கியுள்ளன. பல இலட்சம் ஏக்கர் பயிர் நிலங்கள் நீரில் மூழ்கி அழிந்தன.

இது வரை வெள்ளப்பெருக்கால் இறந்தோர் தொகை பற்றி சரியாக தகவல் இல்லை. பலர் காணாமல் போயுள்ளனர் என அறிவிக்கப்படுகின்றது. இந்த மழை இன்னும் சில நாட்களுக்கு தொடரலாம் என வானிலை அவதான நிலையத்தினர் அறிவித்துள்ளனர்.



தமிழகத்தில் கடந்த சில தினங்களாகப் பெய்து வரும் கன மழையினால் பல கிராமங்கள் நீரில் மூழ்கியுள்ளன. இந் நிலையில் கிருஸ்ணகிரி அவதானப் பட்டி ஏரி அருகில் உள்ள தனியார் கல்லூரி ஒன்றை வெள்ள நீர் சூழ்ந்துள்ளது.

## லெபனான் முன்னாள் பிரதமரின் கொலையுடன் தொடர்புடையவர்களுக்கு தண்டனை வழங்குக

### சிரியாவுக்கு ஐ.நா கோரிக்கை

(ஐ.நா)

லெபனானின் முன்னாள் பிரதமர் ரபீக் ஹரிரியின் கொலையுடன் தொடர்புடையவர்களுக்கு தண்டனை வழங்குமாறு சிரியாவை ஐக்கிய நாடுகள் சபை கோரியுள்ளது.

லெபனான் பிரதமரின் கொலையுடன் சிரியா தொடர்பு பட்டுள்ளமை விசாரணைகளிலிருந்து தெரிய வந்துள்ளதாக ஐக்கிய நாடுகள் சபை தெரிவித்துள்ளது.

தமது 30 பேர் அடங்கிய விசாரணைக் குழுவிற்கு சிரியாவிலிருந்து பல்வேறு மிரட்டல்கள் விடுக்கப்பட்டதாகவும்,விசாரணைகளை மேற்கொள்ள தமது குழுவினரிற்கு சிரியா அரசாங்கம் உரிய ஆதரவை வழக்கவில்லையெனவும் ஐக்கிய நாடுகள் சபை குற்றம் சாட்டியுள்ளது.

இந் .நிலையில் இக்கொலைச் சம்பவம் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட விசாரணை அறிக்கையில் கொலையுடன் தொடர்புடையவர்கள் "எனச் சந்தேகிக்கப்படுவோருக்கு வெளிநாட்டுப் பயணங்களுக்கு தடை விதிக்குமாறும் கூறப்பட்டுள்ளது. இந்த அறிக்கை அமெரிக்கா, இங்கிலாந்து, பிரான்ஸ் ஆகிய நாடுகளின் பல முக்கிய அதிகாரிகள் அடங்கிய குழுவினால் வெளியிடப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

லெபனானின் முன்னாள் பிரதமர் ஹரிரி கடந்த பெப்ரவரி மாதம் 14 ஆம் திகதி பெய்ரூட்டில் மேற்கொள்ளப்பட்ட குண்டுத் தாக்குதலில் கொல்லப்பட்டமை குறிப்பிடத்தக்கதாகும்.



போர் எதிர்ப்புச் செயற்பாட்டாளரான சின்டி சீகன் வோஷிங்டன் வெள்ளை மாளிகையின் முன் நின்று செய்தியாளர்களுக்கு பேட்டியளிக்கின்றார். இவர் ஈராக் யுத்தத்தில் கொல்லப்பட்ட இராணுவ வீரர் ஒருவரின் தாயாவார். இவர் அமெரிக்கப் படைகள் ஈராக்கிலிருந்து திரும்பப் பெறப்படவேண்டும் என தீவிரமாக வலியுறுத்தி வருபவர் ஆவார்.

# படையினரின் தாக்குதலில் காயமடைந்த சிறுவர்களுக்கு உதவிக்கரம் நீட்டுக!

## விடுதலைப்புலிகளின் மட்டு. அரசியல்துறை வேண்டுகோள்

(மட்டக்களப்பு)

**மட்டக்களப்பில் படையினரின் கண்மூடித்தனமான தாக்குதலில் காயமடைந்த சிறார்களுக்கு உதவிக்கரம் நீட்டுமாறு தமிழீழ விடுதலைப்புலிகள் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.**

இது தொடர்பாக தமிழீழ விடுதலைப்புலிகளின் மட்டக்களப்பு மாவட்ட அரசியல்துறை விடுத்துள்ள அறிக்கையில் வலியுறுத்தியுள்ளனர். நேற்று முன்தினம் விடுத்துள்ள அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது;

தமிழர் தயகப்பகுதியான வடக்கு கிழக்கில் இன்று சிறார்களின் நிலை மிகவும் கவலைக்கிடமாக இருக்கிறது. சிறுவர் நலன் பற்றிய உலகளாவிய சிந்தனைகள் இருந்த போதும் பல்வேறு நலநோக்க நிறுவனங்கள் மிகவும் பிரயாசத்துடன் பணியாற்றிய போதும் சிறார்கள் பற்றிய சரியான தகவல் பரிமாற்றம், அவர்களின் அடிப்படைத் தேவைபற்றிய உள்நோக்கம் முழுமைபெற்றதாகச் சொல்ல முடியாதுள்ளது.

மட்டக்களப்பு பட்டணத்திலே கடந்த ஓகஸ்ட் மாதம் மூன்றாம் திகதி அன்று இராணுவக் காவலரணுக்கு மிக அருகாமையில் ஒரு சிறுமியின் உடல் வன்புணர்வுக்குட்படுத்தப்பட்டு கூரிய ஆயுதத்தால் சித்திரவதை செய்யப்பட்டுக் கொலையுண்ட நிலையில் கண்டுபிடிக்கப்பட்டது. சிறிலங்காப் பொலிசார் அது பற்றி எதுவித அக்கறையும் கொள்ளாத நிலையில் அச்சிறுமியின் உடல் அனாதரவாகப் புதைக்கப்பட்டது.

அதன் பின்னர் வெகுஜன அமைப்புக்களின் குறிப்பாக மகளிர் அமைப்புக்களின் போராட்டமே அதை வெளியுலகிற்குக் கொண்டு வந்தது.

தமது ஆசிரியர் ஒருவர் படையினரின் சோதனைச்சாவடியில் அவமானப்படுத்தப்படுவதையோ அல்லது தாக்கப்படுவதையோ எந்தவொரு மாணவனும் விரும்புவதில்லை. கடந்த ஒருமாத காலத்தில் மட்டும் எமது அமைப்பில் இணைவதற்காக 15 சிறார்கள் வந்திருந்தார்கள். அவர்களை பெற்றோரிடம் திருப்பி அனுப்புவதற்காக அவர்களுடன் உரையாடிய போது மேற்கூறப்பட்ட வகையிலான சம்பவங்களின் பாதிப்புக்களும் கடந்த கால இனவாதச் செயற்பாடுகளின் தாக்கமும் அவர்களின் அடிமனதில் உறைந்திருப்பதை அறிய முடிந்தது. அவர்களில் ஏழுபேரை பெற்றோரிடம் திரும்பிச் செல்வதற்கு ஒப்புக் கொள்ள வைப்பது மிகச் சிரமமான காரியமாக இருந்தது. சிறுவர்களாயினும் அவர்கள் தரப்பு நியாயங்கள் வலுவானவையாகவும் எவராலும் மறுக்கமுடியாததாகவும் இருந்தன. இந் நிலையில் கடந்த ஞாயிற்றுக் கிழமை மட்டக்களப்பிலும் யாழ் நகரிலும் நிகழ்ந்த சம்பவங்கள் நெஞ்சை உலுக்குவதாகவும் மிகவும் வேதனை தருவதாகவும் அமைந்துள்ளன. படையினர் மீது யாரோ மேற்கொண்ட தாக்குதலுக்குப் பழிவாங்குவதற்காக விளையாடிக் கொண்டிருந்த மூன்று அப்பாவிச் சிறார்கள் மீது சுட்டுத்தீர்த்திருக்கிறது சிறிலங்கா இராணுவம். அதேவேளை யாழ்நகரிலே சிறிலங்காப் படையின் பொறுப்புணர்ச்சியற்ற வாகன ஓட்டத்தால் சிறுவன் ஒருவர் படுமோசமாக காயமடைந்துள்ளான். இப்போது வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டிருக்கும் அந்தச் சிறுவன் தொடர்பில் பன்னாட்டு அளவில் அறிக்கைவிடும் சில அமைப்புக்களைச் சம்பந்தப்பட்டவர்கள் தொடர்பு கொண்டு உதவிகோரிய போது அவர்களிடமிருந்து சாதகமான பதில்கள் கிடைக்கவில்லை.

பாதிப்பிற்குள்ளான சிறார்களுக்கான பல முன்னுதாரண வேலைத் திட்டங்களை பல ஆண்டுகளுக்கு முன்னமே மேற்கொண்ட தலைமைத்துவத்தைக் கொண்டதும், சிறுவர்கள் தமது எதிர்காலத்தில் சுதந்திரமாகவும் சுயகௌரவத்தோடும் வாழ்வதற்கான போராட்டத்தில் ஈடுபட்டுள்ளதுமான அமைப்பு என்ற வகையில் இப்போது நடந்திருக்கும் இந்த அவலத்தில் பாதிக்கப்பட்டிருக்கும் நான்கு சிறுவர்களுக்காக குரல்கொடுக்கவும், ஆதரவுக்கரம் நீட்டவும் சிறுவர்களின் மேல் உண்மையான கரிசனை உள்ள அமைப்புக்கள் முன்வரவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறோம். என அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# சிறுவர் பூங்காச் சிறார்களுக்கான கலை ஆக்கத்திறனாய்வு நிகழ்வு

(கிளிநொச்சி)

ஊரகவளர்ச்சிப் பணி நிர்வகிக்கும் சிறுவர் பூங்காச்சிறார்களுக்கான "கலை ஆக்கத்திறனாய்வு நிகழ்வு கடந்த 22ஆம் திகதி பிற்பகல் இரண்டு மணிக்கு கிளி.அம்பாள்குளம் குமா சிறுவர் பூங்கா கலைக்கூடத்தில் பூங்காக்களின் இணைப்பாளர் அ.சிறீகுமார் தலைமையில் நடைபெற்றது.

நிகழ்வில் மங்கல விளக்கினை முன்னாள் உதவிக்கல்விப் பணிப்பாளர் சிவநாதன், நாடகநெறியாள்கையாளர் புதுவை அன்பன் ஆகியோர் ஏற்றி




வைத்தனர். தமிழீழ தேசியக் கொடியை வடமராட்சி கிழக்கு கல்விக்கழகப் பொறுப்பாளர் அண்ணாத்துரை, தமிழர் புனர்வாழ்வுக்கழகக் கொடியை சிவஞானசுந்தரம், சிறுவர்பூங்கா மைய நிறுவனக் கொடியை பிரான்சிஸ் ஆகியோர் ஏற்றிவைத்தனர். மாவீரர் குமா திருவுருவப்படத்திற்கு நாடகநெறியாளர் பாலா ஈகச்சுடரேற்றி மலர்மாலை அணிவித்தார்.

கலைமகள் குமா, சோழர் சொக்கலிங்கம் சிறுவர் பூங்காக்களின் சிறார்கள் தமது ஆக்கங்களை மிகச்சிறப்பான முறையில் வழங்கினார்கள். இவற்றில் சொக்கலிங்கம் சிறுவர் பூங்கா முதலாமிடத்திலும், சோழர் சிறுவர் பூங்கா இரண்டாமிடத்திலும், குமா,கலைமகள் சிறுவர் பூங்கா மூன்றாமிடத்திலும் தெரிவானது.

இந்நிகழ்வில் தமிழீழ அரசியல்துறை துணைப் பொறுப்பாளர் சோ.தங்கன் மாணவர்களுக்கான பரிசில்களை வழங்கிச் சிறப்பித்த தோடு இந்நிகழ்வைத்தொடர்ந்து சிறுவர் பூங்காக்களில் பணிபுரியும் நிர்வாகிகள், ஆசிரியர்கள், பணியாளர்களுக்கான கௌரவிப்பு நிகழ்வு இடம்பெற்றது. இதன்போது சோ.தங்கன் பாராட்டுப்பரிசில்களை வழங்கிச் சிறப்பித்து கருத்துரைகளையும் வழங்கினார். இந்நிகழ்வில் பெருமளவானோர் கலந்துகொண்டனர்.

# மட்டு.மாவட்டத்தில் படையினர் திடீர் சோதனை மக்கள் மத்தியில் அச்சம்

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு- கல்முனை வீதியில் கல்லடியில் அமைக்கப்பட்டுள்ள மணிக்கூட்டுக் கோபுரத்துக்கு முன்பாக பெருமளவிலான பொலிசாரும், இராணுவத்தினரும் கடந்த திங்கட்கிழமை திடீரென நிறுத்தப்பட்டு வீதியால் செல்கின்ற அனைத்து வாகனங்களும், மறிக்கப்பட்டு வாகனங்களில் வந்தவர்கள் இறக்கப்பட்டுக் கடும் சோத னைக்கு உள்ளாக்கப்பட்ட பின்னரே பயணத்தைத் தொடர அனுமதித்தனர்.

உந்துருளியில், ஈருருளிகளில் வந்தோரும் இவ்வாறே கடும் சோதனைக்கு உள்ளாக்கப்பட்டனர். நண்பகல் 11.00 மணி தொடக்கம் சுமார் 2.00 மணித்தியாலம். இந்தச் சோதனை நடவடிக்கை மேற் கொள்ளப்பட்டதால் பொது மக்கள் பல்வேறு அசௌகரியங்களுக்கு உள்ளானார்கள். தற்போது திடீர் திடீரெனச் சோதனை நடவடிக்கைகள் மட்டு. மாவட்டத்தில் மேற்கொள்ளப்படுவதால் மக்கள், அச்சமும், பீதியும் அடைந்துள்ளனர். உந்துருளிகளிலும் இராணுவ வாகனங்களிலும் ரோந்து நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன.

# அவசரகால வீதிவடிகால் சீரமைப்புக்குழு அங்குரார்ப்பணம்

# பெருவெள்ளத்தினால் ஏற்படும் பாதிப்புக்களை நீக்கும்

அவசரகால வீதி வடிகால் சீரமைப்புக்குழு கடந்த திங்கட்கிழமை மாலை 5.00 மணிக்கு தமிழீழ நிர்வாகசேவை கேட்போர் கூடத்தில் அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்பட்டது. இது தற்போதைய பெருமழை வெள்ளம் போன்றவற்றினால் மக்களுக்கு ஏற்படும் பாதிப்புக்களைப் போக்கும் வகையில் செயற்படும் இக்குழுக் கூட்டத்தில் கரைச்சிப் பிரதேச சபை, வீதி அபிவிருத்தி அதிகார சபை வீதி அபிவிருத்தித் திணைக்களம், நிர்வாகசேவை (பொறியியல் பிரிவு), ஆகிய திணைக்களங்கள் கலந்து கொண்டன.

குழுவின் அடுத்தடுத்த கூட்டங்கள் கரைச்சிப் பிரதேச சபையில் ஒவ்வொரு புதன்கிழமையும் மாலை 5.00 மணிக்கு நடாத்துவதென தீர்மானிக்கப்பட்டதுடன் நீர்ப்பாசன திணைக்களம், நீர்வழங்கல் வடிகாலமைப்புச்சபை ஆகிய திணைக்களங்களையும் சேர்த்துக்கொள்ளுவதெனவும் தீர்மானிக்கப்பட்டது.

இக்குழுவினால் தற்போது கிளிநொச்சி நகர வீதிகளில் பெருமழை காரணமாக ஏற்பட்டுள்ள வெள்ளத்தால் ஏற்படும் சுற்றாடல் பிரச்சினை களுக்குத் தீர்வுகாணும் வகையில் ஏ-9 வீதியின் இருமருங்கிலும் கால்வாய்கள் வெட்டும்பணி நடைபெற்று வருகிறது. எனவே வீதியின் இரு மருங்கிலுமுள்ள வர்த்தகர்களும் வீட்டுச் சொந்தக்காரர்களும் தங்கள் வர்த்தக நிலையங்களுக்கும் வீடுகளுக்கும் முன் நீர்க்குழாய்களைப் பொருத்தி பாதைகளைச் செப்பனிட்டுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றார்கள்.

தொடர்ந்து இக்குழுவின் செயற்பாடுகள் உள்ளூர் கிராம வீதிகளுக்கும் விஸ்தரிக்கப்படவுள்ளது. எனவே பெருமழையால் ஏற்படும் வெள்ளம் போக்குவரத்துத்தடை என்பனவற்றுக்கு கரைச்சிப் பிரதேச சபையின் விசேட ஆணையாளர், செயலாளர் ஆகியோருடன் தொலைபேசி மூலம் (தொலைபேசி இல. 2285761) தொடர்பு கொண்டு பாதிப்புக்களைத் தெரிவிக்கலாம் ஏ.9 வீதியின் இரு மருங்கிலும் நீர் வழிந்தோடும் இடங்களைத் தடை செய்தல், மண்கிரவல் இட்டு மூடுதல், குப்பைகள், கழிவுகள் தேங்கவிடுதல் ஆகியன அவசரகால நிலைமையின் கீழ் குற்றச் செயல்களாகக் கணிக்கப்பட்டு சட்ட நடவடிக்கைகளுக்கு உட்படுத்தப்படும்.

எனவே சகலமக்களும் ஒன்றிணைந்து வெள்ளத்தால் ஏற்படும் பாதிப்புகளை இல்லாதொழிக்க முன்வருமாறு குழு வேண்டுகோள் விடுக்கின்றது.

—சமூக பொருளாதார வளர்ச்சி நிறுவனத்தின் ஏற்பாட்டில்—

# விசுவமடு மாவீரர் துயிலும் இல்லத்தில் வாராந்த சிரமதானப்பணிகள் ஆரம்பம்

(புதுக்குடியிருப்பு)

உடையார்கட்டு, விசுவமடுப் பிரதேசத்தில் முதன்மை நிறுவனமாக



(படம்-தவரட்ணம்)

செயற்பட்டுவரும் சமூக பொருளாதார வளர்ச்சி நிறுவனத்தின் ("செடோ") ஒழுங்குபடுத்தலின் கீழ் இப்பிரதேச வாழ் மக்களை ஒழுங்கிணைத்து மாபெரும் சிரமதானப்பணி கடந்த ஞாயிற்றுக்கிழமை விசுவமடு மாவீரர் துயிலுமில்லத்தில் ஆரம்பித்துவைக் கப்பட்டது.

முதற்கட்டமாக நடைபெற்ற இச் சிரமதானப்பணியில் "செடோ" நிறுவனத்தின் பணியாளர்கள், தொண்டர்கள், முன்பள்ளி ஆசிரியர்கள், தேராவில், மூங்கிலாறு ச.பொ.அ.குழு உறுப்பினர்கள், பொதுமக்கள் என நூற்றுக் கணக்கானோர் உணர்வு பூர்வமாகப் பங்கேற்றனர்.

தொடர்ந்து ஐந்து கட்டங்களாக இச்சிரமதானச் செயற்பாடு நடைபெற ஒழுங்கமைக்கப்பட்டுள்ளதாகவும் எதிர் வரும் மாவீரர் தினத்திற்கான முன் ஆயத்த செயற்பாடாக மக்கள் அனைவரும் உணர்வுபூர்வமாக இதில் பங்கேறகவுள் ளார்கள் எனவும் சமூக பொருளாதாரவளர்ச்சி நிறுவன இணைப் பாளர் யூட் தெரிவித்தார். (08)

**ஐ.ஒ.எம். நிறுவன நிதியுதவியுடன் முன்பள்ளி கல்வி மேம்பாட்டு நிலையத்தின் ஒழுங்கமைப்பில் முல்லை பொருளாதார அபிவிருத்தி நிறுவனத்தால் பதினொரு முன்பள்ளி ஆசிரியர்கட்கு தலா ஒவ்வொரு துவிச்சக்கரவண்டியும் குடையும் வழங்கப்பட்டது. இந் நிகழ்வில் நிறுவன இணைப்பாளர் சுரேஸ்குமார் த.பொ. மே. நிறுவன இணைப்பாளர் தயாபரன் ஆகியோர்கலந்து சிறப்பித்தனர். (படம்-சகிலா)**



# பாடசாலையில் படையினர் பிரசன்னம்; மாணவர்களின் கல்விச் செயற்பாடு பாதிப்பு

(தென்மராட்சி)

**எழுதுமட்டுவாள் அரசினர் தமிழ் கலவன் பாடசாலை மீள இயங்கியும் படையினரின் பிரசன்னம் இங்கு தொடர்ந்து காணப் படுவதால் மாணவர்கள் அச்சம் கொண்டுள்ளனர் என பாட சாலை கல்விச் சமூகம் தெரிவித்துள்ளது.**

இதனால் மாணவர்கள் வருகை தற்பொழுது குறைந்த அளவே இருப் பதாகவும் படைமுகாம்கள் பாட சாலையைச் சூழ முற்றுகை யிடப்பட்டிருப்பதால் மாணவர்கள் சுதந்திரமான கற்றல் செயற் பாடுகளில் பாரியபின்னடைவு ஏற் பட்டிருப்பதாகவும் தெரிவிக் கப்படுகிறது. எனவே பாடசாலைச் சூழலை முற்றுகையிட்டபடி உள்ள படைமுகாம்களை முற்றாக அகற்ற சம்பந்தப்பட்டவர்கள் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று பாடசாலைச் சமூகம் கோரியுள்ளது. (28)

# இலங்கை போக்குவரத்துச் சபைக்கு சாரதிகள் பற்றாக்குறை

(யாழ்ப்பாணம்)

இலங்கை போக்குவரத்துச் சபையின் யாழ்ப்பாணம் மற்றும் பருத்தித்துறை சாலைகளின்கீழ் சேவையில் ஈடுபடும் பேருந்துகளை ஓட்டுவதற்கான சாரதிகள் பற்றாக்குறையாகக் காணப்படுவதாக இலங்கை போக்குவரத்துச் சபையின் வடபகுதி முகாமையாளர் கே.கணேசபிள்ளை கூறியுள்ளார்.

அந்தவகையில் யாழ்ப்பாணசாலையில் ஒன்பது சாரதிகள் வெற்றி டங்களும் பருத்தித்துறை சாலையில் ஐந்து சாரதிகள் வெற்றிடங்களும் நிலவிவருவதாக அவர் மேலும் கூறியுள்ளார்.

இவ்வாறான சாரதிகள் வெற்றிடங்கள் நீண்டகாலமாக நிலவி வருகின்ற போதும் இவ் வெற்றிடங்களை நிரப்புவதற்கு இலங்கை போக்குவரத்துச் சபையின் பணிப்பாளர்சபை எந்த நடவடிக்கைகளையும் எடுக்கவில்லை.

இதன்காரணமாக யாழ்ப்பாணம் மற்றும் பருத்தித்துறை சாலையின் கீழ் சேவையில் ஈடுபடுத்துவதற்கு முடியாத நிலையில் 14 பேருந்துகள் முடக்கமடைந்துள்ளது..

இதனால் பொதுமக்களுக்கான திருப்திகரமான சேவைகளை வழங்க முடியாத நிலையுள்ளதாக போக்குவரத்துச்சபையின்வடபகுதி முகாமையாளர் கே.கணேசபிள்ளை கவலை தெரிவித்துள்ளார். (33)

# தென்மராட்சியில் ஆறு பாடசாலைகளுக்கு வகுப்பறை மேம்படுத்தல் வசதி

(யாழ்ப்பாணம்)

யாழ்.தென்மராட்சி கல்வி வலயத்தில் உள்ள ஆறு பாடசாலை களை தெரிவு செய்து அப்பாட சாலைகளின் வகுப்பறை வசதி களை மேம்படுத்திக்கொடுக்க ஐக்கிய நாடுகள் சபை சிறுவர் பாதுகாப்பு நிதியம் நடவடிக்கை எடுத்துள்ளது.

இத்திட்டத்தின் கீழ்கைதடி சேதுகாவலர் வித்தியாலயம், நுணா வில் அமிர்தாம்பிகை வித்தி யாலயம்,அல்லாரை அரசினர் தமிழ்கலவன் பாடசாலை, சாவகச் சேரி சக்தி அம்மன் பாடசாலை, மீசாலை கமலாம்பிகை வித்தி யாலயம் மட்டுவில் வடக்கு அரசினர் தமிழ்கலவன் பாடசாலை ஆகிய ஆறுபாடசாலைகளினதும் வகுப்பறை வசதிகளே மேம்படுத்தப்படவுள்ளன.

பின்தங்கிய பிரதேச பாடசாலை, யுத்தத்தால் பாதிக்கப்பட்ட பாடசாலை, வளப்பற்றாக்குறையுடன் இயங்கிவரும் பாடசாலை ஆகியன முன்னுரிமை அடிப்படையில்தெரிவு செய்யப்பட்டே இவ் வகுப்பறை மேம் பாட்டுத் திட்டத்துள் ஈர்க்கப்பட்டதாக தென்மராட்சி வலயக்கல்விப் பணிப்பாளர் திருமதி றெஜினா இருதய நாதன் கூறியுள்ளார். (33)

# சுனாமியால் பாதிக்கப்பட்டோருக்கு தொண்டரமைப்புகளின் உதவி போதாது

## -யாழ்மாவட்ட கடற்றொழிலாளர் அமைப்புகளின் தலைவர்

(யாழ்ப்பாணம்)

சுனாமிஅனர்த்தம் ஏற்பட்டதை யடுத்து குடாநாட்டின் கரையோரப் பிரதேசங்களை இயல்பு நிலைக்கு கொண்டுவருவதற்கான உதவிகளை வழங்கப்போவதாக போட்டி போட்டுக்கொண்டு வந்த உள்ளூர் மற்றும் சர்வதேச தொண்டரமைப் புக்கள் பல இதுவரை குறிப்பிட்டுச் சொல்லத்தக்க எந்தவொரு உதவிகளையும் செய்ய வில்லையென யாழ்.மாவட்ட கடற் றொழிலாளர் அமைப்புக்களின் தலைவர் க.தவரட்ணம் குற்றம் சாட்டியுள்ளார். யாழ்நகரிலுள்ள கடற்றொழிலாளர் அமைப்புக்களின் இணைய அலுவலகத்தில்இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

குறிப்பிட்டு சொல்லத்தக்க ஒரு சில உள்ளூர் மற்றும் சர்வதேச அரச சார்பற்ற தொண்டரமைப்புகள் தவிர ஏனையவை வெறுமனே சுனாமியால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு என்ன தேவை என்பதை கேட்டறிந்து கொண்ட பின்னர் இங்கிருந்து வெளி யேறிவிட்டன.

கடந்த 20 வருடங்களிற்கு முன்னர் குடாநாட்டுக் கடற்பரப்பில் தொழிலுக்குப் பயன்படுத்தப்பட முடியாததென கடற்றொழிலாளர் களால் நிராகரிக்கப்பட்ட படகு களையும் வெளியிணைப்பு இயந் திரங் களையும் ஒரு தொண்டரமைப்பு வழங்கியுள்ளது. இது தொடர்பாக அரச அதிபருக்கு முறைப்பாடு செய் யப்பட்டுள்ளது.

இந் நிறுவனத்தினால் வலிகாமம் மேற்குப்பகுதியிலுள்ள கடற் றொழிலாளர் சிலருக்கு படகுகளும், வெளியிணைப்பு இயந்திரங்களும் வழங்கப்பட்டுவிட்டன. குறிப்பாக சுனாமி அனர்த்தம் ஏற்பட்டு பல மாதங்களைக்கடந்து விட்டபோதும் உதவிகள் எதுவும் கிட்டாததாலேயே இவ்வாறான தரமற்ற பொருட்களை கடற்றொழிலாளர் பெறவேண்டி யுள்ளது.

மறுபுறத்தே சுனாமி அனர்த்தம் ஏற்பட்டு பத்து மாதங்களைக் கடந்து விட்டபோதும் இதுவரை சுனாமியால் பாதிக்கப்பட்ட ஒரே ஒரு குடும்பத்திற்கு மட்டுமே நிரந்தர வீடு அமைத்து வழங்கப்பட்டுள்ளது. இதை செயலக அதிகாரிகளும் உறுதிப்படுத்தி யுள்ளனர்.

இதனடிப்படையில் சுனாமியினால் பாதிக்கப்பட்ட குடாநாட்டு கடற் றொழிலாளர்களுக்கான உதவிகள் எந்தளவில் கிட்டுகின்றது என்பதை புரிந்து கொள்ள முடியுமென அவர் மேலும் தெரிவித்தார். (27)

# இயல்பான வாக்களிப்புக்கு வசதியாக கொத்தணிவாக்களிப்பு நிலையங்களில் ஏற்பாடு

## -யாழ்.தெரிவத்தாட்சிஅலுவலர்

(யாழ்ப்பாணம்)

பொதுமக்களின் இயல்பான வாக்களிப்புக்கு இடையூறுகள் ஏற் படாத விதத்திலேயேகொத்தணி வாக்களிப்பு நிலையங்களுக்கான பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்படும் என்று யாழ்ப்பாணத்தேர்தல் மாவட்ட தெரிவத்தாட்சி அலுவலரும், அர சாங்க அதிபருமான கே.கணேஷ் கூறி யுள்ளார்.

எதிர்வரும் சனாதிபதித்தேர்தலில் புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசத்துள் வாழும் யாழ்ப்பாண தேர்தல் மாவட் டத்து வாக்காளர்கள் வாக்களிப்புச் செய்வதற்கு வசதியாக முகமாலை இராணுவச் சோதனைச் சாவடி யிலிருந்து 500 மீற்றர் தூரத்தில் கொத்தணி வாக்களிப்பு நிலையங்கள் நிறுவப்படவுள்ளன.

இவ்வாறான கொத்தணி வாக் களிப்பு நிலையங்களில் வன் முறைகள் இடம்பெறுவதை தவிர்க்கும் முகமாக அங்கு பலத்தத் பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப் படவுள்ளன.

எனினும் இக் கொத்தணி வாக்கு நிலையங்களுக்கு பாதுகாப்பினை வழங்கவுள்ள பாதுகாப்பு தரப்பினர் வாக்காளர்களது இயல்பான வாக்களிப்பு நடவடிக்கைகளில் எந்த விதத்திலும் தலையிடவோ அல்லது இடையூறுகளை ஏற்படுத்தவோ மாட்டார்கள் அத்துடன் வாக்காளர்கள் மீது எவ்விதமானபாதுகாப்பு கெடுபிடிகளும் மேற்கொள்ள இடமளிக்கப்படாது என்றும் கூறி யுள்ள யாழ்.தேர்தல் மாவட்ட தெரி வத்தாட்சி அதிகாரி கே.கணேஷ் பொதுமக்களது சுதந்திரமானவாக் களிப்பினை உறுதி செய்யும் விதமாகவே சகல பாதுகாப்பு ஏற்பாடுகளும் செய்யப்படும் என்றும் கூறியுள்ளார். (33)

# யாழ்.நகரப் பகுதியில் திருட்டுக்கள் அதிகரிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்தில் கடந்த சிலநாட்களாக திருட்டுச் சம்பவங்கள் அதிகரித்து வருகின்றன என யாழ்.பொலிசார் தெரிவித்துள்ளனர்.

யாழ்ப்பாணநகரின் மையப்பகுதியிலேயே இத் திருட்டுச் சம்பவங்கள் அதிகரித்து வருகின்றன. இத்தகைய திருட்டுச் சம்பவங்களில் ஈடுபடுவோரில் பெரும்பாலானோர் பெண்களும், சிறுவர்களும் எனத் தெரிவிக்கப்படுகிறது.

தூரஇடங்களில்இருந்து நகருக்கு வருகின்ற நாகரிக உடையணிந்த பெண்களே திருட்டுச்சம்பவங்களில் ஈடுபடுகின்றனர். இவர்கள் தமக்கு உதவியாக சிறுவர்களைப் பயன்படுத்தி வருகின்றனர். (கீ)

# ஆசிரியர்களுக்கு பதவியுயர்வு நடவடிக்கை யாழில் துரிதப்படுத்தப்படவில்லை

(யாழ்ப்பாணம்)

ஆசிரியர் சேவைப் பிரமாணக் குறிப்பின் பிரகாரம் யாழ்.மாவட்ட ஆசிரியர்களுக்கு பதவி உயர்வுகளை வழங்கும் நடவடிக்கைகள் துரிதப் படுத்தப்படவில்லை என்று விசனம் தெரிவிக்கப்படுகிறது.

அரசின் திட்டத்துக்கு அமைவாக ஆசிரிய சேவைப்பிரமாணக்குறிப்பின் அடிப்படையிலான பதவி உயர்வு நியமனக் கடிதங்கள் யாவும் எதிர் வரும் டிசம்பர் மாதத்திற்கு முன்பதாக பதவிஉயர்வுகளை பெறும் ஆசிரியர்களுக்கு அனுப்பிவைக்கப் படவேண்டும்.

எனினும் டிசெம்பர் மாதத்துக்கு முன்னர் பதவிஉயர்வுகளைப் பெறும் ஆசிரியர்களுக்கான நியமனக் கடிதங்களை அனுப்புவதற்குரிய நட வடிக்கைகள் எதுவும் யாழ். மாவட்டத்தில் துரிதப்படுத்தப்பட வில்லை.

எனினும் தெற்கில் பதவியுயர்வு பெறும் சகல ஆசிரியர்களுக்கும் நியமனக் கடிதங்கள் அனுப்பிவைக் கப்பட்டுள்ளன.

இதனால் யாழ்.மாவட்டத்தில் சேவையாற்றும் ஆசிரியர்கள் விசன மடைந்துள்ளனர். (33)

# தூக்கில் தொங்கிய நிலையில் சிறுவனின் சடலம் மீட்பு

யாழ். உடுப்பிட்டி இமையாணன் பகுதியில் உள்ள கடையில் தூக்கில் தொங்கிய நிலையில் சிறுவன் ஒருவனின் சடலம் மீட்டெடுக்கப்பட்டு மந்திகை மருத்துவமனையில் ஒப்படைக்கப்பட்டுள்ளது. துன்னாலை தெற்கு, மாலுச்சந்தியைச் சேர்ந்த 12 வயதுடைய சூரியகாந்தன் சுதர்சன் என்ற இந்த சிறுவன் உடுப்பிட்டி இமையாணன் பகுதியில் உள்ள உறவினர்களுடைய வீட்டில் தங்கியிருந்ததாக கூறப்படுகின்றது.

கடந்த ஞாயிற்றுக்கிழமை குறிப்பிட்ட வீட்டில் உள்ளவர்கள் இச் சிறுவனை தமது கடையைப் பார்த்துக் கொள்ளும் படி கூறிவிட்டு கோவிலுக்கு சென்றதாகவும், இதனைத் தொடர்ந்து வீட்டிற்கு வந்து பார்த்த போது சிறுவன் தூக்கில் தொங்கிய நிலையில் காணப்பட்ட தாகவும் சிறிலங்கா பொலிசாரிடம் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. இதனைத் தொடர்ந்து உரிய இடத்திற்கு சென்ற பொலிசார் சடலத் தை மீட்டெடுத்து மந்திகை மருத்துவ மனையில் சடலப் பரிசோதனைக்காக ஒப்படைத்தனர்.

# மிதிவெடி அகற்றியபிரதேசம் பொதுமக்களிடம் கையளிப்பு

(யாழ்ப்பாணம்)

நாயன்மார்கட்டுப் பிரதேசத்தில் மிதிவெடியகற்றப்பட்ட விவசாயநிலங்கள் விவசாய நடவடிக்கைக்காக மக்களிடம் கையளிக்கப்பட்டது.

கடந்த 1995 ஆம் ஆண்டு நடைபெற்ற இராணுவ ஆக்கிரமிப்பு நடவடிக்கையின் பின்பு பாதுகாப்பு வலயமாக இராணுவத்தினால் பிரகடனப்படுத்தப்பட்ட இப் பிரதேசத்தில் இதுவரை காலமும் செய்கைக்காக விவசாயிகளிடம் கையளிக்கப்படாமல் இருந்து வந்தது.

இதனால் இவ்வாறு உயர்பாதுகாப்பு வலயமாக இருந்த இந்த நிலப்பரப்பில் விவசாயச் செய்கைமேற்கொண்டு வந்த விவசாயக்குடும்பங்கள் பெரும் பொருளாதாரநெருக்கடியை எதிர்நோக்கி வந்தமை குறிப்பிடத்தக்கது. (கீ)

# சாவகச்சேரி வைத்தியசாலையில் சிறுவர் வைத்திய விடுதி

(தென்மராட்சி)

யாழ்.தென்மராட்சி சாவகச்சேரி வைத்தியசாலையில் சிறுவர் களுக்கான வைத்தியவிடுதி ஒன்றை புதிதாக நிர்மாணிப்பதற்குரிய உதவி களை வழங்க ஜப்பானிய தொண்டர் நிறுவனம் ஒன்று முன்வந்துள்ளது.

இதற்காக 20 மில்லியன் ரூபாவை அந்நிறுவனம் வழங்கி யுள்ளது. இந்நிதியில் மேற்படி வைத்தியசாலையில் சிறுவர் களுக்கான வைத்திய விடுதியை அமைக்கும் பணிகள் தற்பொழுது இடம்பெற்று வருகின்றன.

இவ்வைத்தியவிடுதியில் சிறுவர் களுக்கான நவீன வைத்திய வசதிகள், தொழில்நுட்பவசதிகள் என்பனவும் ஏற்படுத்தப்படவுள்ளன என்று பிரதிமாகாண சுகாதார சே வைகள் பணிப்பாளர் வைத்திய கலா நிதி ஆ.கேதீஸ்வரன் கூறினார். (33)

# மகிந்தவை வீழ்த்தப்போகும் சந்திரிகாவின் நீண்டகால திட்டம்

சிறிலங்கா சுதந்திரக்கட்சி பண்டாரநாயக்கவின் குடும்பச் சொத்து. இக்கட்சியின் உரிமையாளர்கள் பண்டாரநாயக்கர்களாவர். பண்டாரநாயக்கவின் யுகத்தில் இக்கட்சியை குடும்பச்சொத்தாக அவர் கருதவில்லை. சிறிமா அம்மையாரின் யுகத்திலே, இக்கட்சி குடும்பச்சொத்தாக்கப்பட்டது. ஐக்கிய தேசியக்கட்சி அல்லது சிறிலங்கா சுதந்திரக் கட்சி இந்நாட்டின் அதிகாரத்தைக் கைப்பற்றி ஆட்சி புரிந்தது. குடும்ப ஆதிக்கத்தில் இருந்து இக்கட்சியின் அதிகாரம் மற்றவர் கைக்குப் போவதை பண்டா குடும்பத்தினர் விரும்பமாட்டார்கள். அப்படி அக்கட்சி மற்றவர் கைக்கு மாறினால் தங்களின் குடும்ப ஆதிக்கத்தின் சரித்திரம் முடிவடையும் என்பதை அவர்கள் நன்கு உணர்வார்கள்.

மகிந்தராஜபக்ஷவை சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் வேட்பாளராக நிறுத்துவதற்குக் காரணம் என்னவென்றால். மகிந்த ராஜபக்ஷவின் மேல் இருக்கும் பற்றுக்காக அல்ல. இத்தருணத்தில் சந்திரிகா அம்மையாரால் வேறு எதுவும் செய்யமுடியாத காரணத்தால்தான் மகிந்தராஜபக்ஷவை சனாதிபதி வேட்பாளராக சந்திரிகா தெரிவு செய்தார். மகிந்த சிறிலங்கா சுதந்திரக்கட்சியின் விசுவாசியாகவும் முழுநேர ஊழியராகவும் இருந்த படியால் அவருக்கு இந்த சனாதிபதி வேட்பாளர் நியமனத்தை வழங்க சந்திரிகா நிர்ப்பந்திக்கப்பட்டார். சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் சனாதிபதி வேட்பாளராக அநுராபண்டாரநாயக்கவை நிறுத்த அவர் கட்சியின் விசுவாசி அல்ல வேறொருவர் இல்லாதபடியால் மகிந்த ராஜபக்ஷவுக்கு வேட்பாளர் நியமனம் சந்திரிகாவினால் வழங்கப்பட்டது.

ஆகவே மகிந்தராஜபக்ஷவை சனாதிபதிப்பதவிப் போட்டியில் நிறுத்தி அவரை இத்தேர்தலில் தோற்கடிப்பதன் மூலம் தனது குடும்ப ஆதிக்கத்தைக் காப்பாற்றுவதே சந்திரிகாவின் தற்போதைய தந்திரமாகும். மகிந்த வெற்றிபெறுவார் என நினைத்து அவரின் தோல்விக்கான சகல நடவடிக்கைகளையும் திரைமறைவில் மேற்கொண்டு வருகிறார் சனாதிபதி சந்திரிகா. வேட்பாளர் நியமனம் தனக்குக் கிடைக்கும்வரை ராஜபக்ஷ சூரனாகவே செயற்பட்டார். அதன் பிறகு அவரால் சூரனாக செயற்பட முடியாமல்போயிற்று. காரணம் அவரால் தனித்தீர்மானம்எதுவும் மேற்கொள்ள முடியாது ஆனால் ஆர்.பிரேமதாசாவுக்கு ஐக்கிய தேசியக்கட்சி சனாதிபதி வேட்பாளர் நியமனத்தை வ்ழங்கிய பின் அக்கட்சியின் சகல அதிகாரங்களும் அவருக்கு வழங்கப்பட்டது. அப்பொழுது அவர் தனக்கு இடைஞ்சல்களைக் கொடுக்காமல் ஒதுங்கி இருக்கும்படி ஜே.ஆர்.ஜெயவர்த்தனாவிடம் வேண்டுகோள் விடுத்தார். அதைஏற்று அவர் கௌரவமாக ஒதுங்கிக்கொண்டார்.

சனாதிபதி சந்திரிகாவை திருப்திப்படுத்துவதற்காகவும், அவரின் அனுசரணைகளை இத்தேர்தலில் பெறுவதற்காகவும் அவர் கட்சியின் தலைவராக இருக்கவேண்டும் என்ற தந்திரத்தை மகிந்த கையாண்டுள்ளார். ஆனால் சிறிலங்கா சுதந்திரக்கட்சியின் சனாதிபதி வேட்பாளர் தானே, ஆகவே கட்சியின் தலைமைப்பதவி தனக்கு வேண்டும் என கோரிக்கையை முன்வைப்பாரானால் சனாதிபதி சந்திரிகா கடும் சிக்கலில் மாட்டிக் கொள்வார். ஆனால் சந்திரிகா அம்மையார் கட்சியின் சம்மேளனத்தில் மிக சாதுாரியமாக தனது கபடநாடகத்தை நடத்தி கட்சியின் தலைமைப் பதவியைப் பாதுகாத்துக் கொண்டார். ஆனபடியால் மகிந்தராஜபக்ஷவுக்கு கட்சியின் கட்டுப்பாட்டை மீறமுடியாமல் போயிற்று. ஆகவே கட்சியின் தலைமைப்பதவியை அவரால் கைப்பற்ற முடியாது போனது ஆகையினால் சந்திரிகாவினால் ஏவப்படும் ஏவுகணைகளை அவர் சமாளிப் பதைத் தவிர வேறு எதுவும் செய்யமுடியாது.

கட்சியின் நாணயக்கயிறு சந்திரிகாவின் கையில் உள்ளது. புதிய சனாதிபதி வந்தால் பாராளுமன்றம் கலைக்கப்படும். கட்சி வேட்பாளரை நியமிக்கும் அதிகாரம் ராஜபக்ஷவுக்குக் கிடையாது. சிறிலங்கா சுதந்திரக்கட்சி தலைவியிடம் அந்த அதிகாரம் உள்ளபடியால் அவரை கட்சியின் அங்கத்தவர்கள் எதிர்க்கமாட்டார்கள். அப்படி அவரை எதிர்த்தால் எதிர்வரும் பொதுத் தேர்தலில் வேட்பாளர் பட்டியலில் அவர்களின் பெயர்கள் இடம்பெறமாட்டாது. மகிந்த ராஜபக்ஷ கடைசியாகப் போட்டியிடுவது சுதந்திரக்கட்சி சார்பிலோ அல்லது பொதுஜன ஐக்கிய முன்னணியின் சார்பிலோ அல்ல. ஐக்கிய மக்கள் சுதந்திரமுன்னணியின் சார்பில் போட்டியிடுகிறார். இது நிரந்தரமான கட்சி அல்ல. இவர் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணிசார்பில் தேர்தல் களத்தில் நிற்கின்றபடியால் அவர் அடுத்த பொதுத் தேர்தல் வரை உயிருடன் இருந்தால் சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் வேட்பாளர் நியமனம் அவருக்கு கிடைக்காது.

சனாதிபதி சந்திரிகா மகிந்த் ராஜபக்ஷ சனாதிபதியாவதை திரைமறைவில் இருந்து தடுப்பது நிச்சயம். கட்சியின் அதிகாரம் மகிந்த ராஜபக்ஷவின் கைக்கு செல்வதை அவர் விரும்ப்மாட்டார். என்னவிலை கொடுத்தாவது மகிந்த ராஜபக் ஷவை இத்தேர்தலில் தோற்கடிப்பதற்கு தன்னால் ஆன சகலவழிகளையும் கையாள் வதற்கு சந்திரிகா தயங்கமாட்டார்.

அனுபவசாலியான மகிந்த ராஜபக்ஷ சனாதிபதித் தேர்தலில் போட்டியிடும்பொழுது சிறிலங்கா சுதந்திரக்கட்சியின் உரிமையாளர்களான பண்டாரநாயக்கர்களிடம் இருந்து எதிர்ப்புகள்வரும். இதை சமாளிப்பது எப்படி? இதற்கான மார்க்கங்களை தேடிக்கொள்வது மிக அவசியமாகும். சி.பி.டிசில்வா, ஹெக்டர் கொப்பேகடுவ போன்றவர்களுக்கு நடந்தது என்ன என்பதை மகிந்த உணர்ந்து கொள்ளவேண்டும். மகிந்த ராஜபக்ஷ தனக்கு சனாதிபதியிடம் இருந்து எதிர்ப்புகள் வருகின்றபடியால் ஜே.வி.பி, ஜாதிகஹெல உறுமய கட்சிகளின் கோரிக்கைகளை ஏற்றுக் கொள்ள வேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளார். தேவையற்ற நிபந்தனைகளை விதித்து அதை ஏற்றுக்கொள்ளக்கூடிய பரிதாபமான நிலைக்கு ராஜபக்ஷ தள்ளப்பட்டுள்ளார். ஜே.வி.பி, ஜாதிகஹெலஉறுமய ஆகிய இரண்டு கட்சிகளின் ஆயுள் முடிவடையும் தருணத்தில் மகிந்த ராஜபக்ஷவின் உதவியுடன் கரைசேருவதற்காகவே இவரை தங்களது வலையில் சிக்கவைத்துள்ளார்கள். இது சனாதிபதி சந்திரிகாவுக்கு நல்லதொரு வாய்ப்பாக அமைந்துள்ளது இதனால் மகிந்த ராஜபக்ஷவின் பலவீனங்களை உணர்ந்த சந்திரிகா அவரை அரசியல் ரீதியில் பலவீனப் படுத்துவதற்கு சகல வழிகளையும் கையாழுவதில் வெற்றிகண்டுள்ளார்.

The position applied for should be indicated on the top of your application and on the top left hand corner of the envelope. Applications should be sent with the names of two non related referees on or before **03rd November 2005** to:

**Save the Children in Sri Lanka**
**142, Kandy Road , Kilinochchi Regional Office**

**Only applicants selected for the interview will be contacted.**

Save the Children in Sri Lanka [SCiSL] is part of the world's largest independent movement for children working in over 100 countries. SCiSL is a non religious, non political, independent international organization working for the protection and the full realization of child rights. Our work in Sri Lanka focuses on **Education, Children Affected by Armed Conflict/Disaster** and **Social Harmony and Peace**. Our projects, both self implemented and in partnership with local organizations are carried out in over 18 locations throughout the country.

**No telephone inquiries please.**

(சி.13119)

# புதுக்குடியிருப்பு பனை தென்னைவள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம்

பதிவு இல:-எம/06

## பதவி வெற்றிடம்

**கணக்காளர்:-குறி.இல 104/10 எண்ணிக்கை 01**

**சம்பளத்திட்டம்:-4750+3750-100x10-110x10-10600 (சுற்று நிருபம் 31/97 படி)**

**கல்வித்தகைமை**

அ. 11 ஆவது சம்பளத்திட்டத்தில்அமைந்த கணக்குப் பதிவினர், கணக்கு எழுதுனர் அல்லது கணக்காய்வு எழுதுநர் பதவியில் மூன்று வருடத்துக்கு குறையாத அனுபவம்.

அல்லது

12 ஆவது சம்பளத்திட்டத்தில் அமைந்த கணக்குப் பதிவினர், கணக்கு எழுதுநர் அல்லது கணக்காய்வு எழுதுநர் பதவியில் ஆறு வருடத்திற்குக் குறையாத அனுபவம்.

அல்லது

ஆ. ஐக்கிய ராச்சியத்தின் கணக்குப் பதிவினர் நிறுவனத்தில் இறுதிப் பரீட்சையில் சித்தியுடன் அங்கீகரிக்கப்பட்ட வர்த்தக கைத்தொழில் நிறுவனம் ஒன்றில் கணக்குப் பகுதியில் அல்லது கணக்காய்வுப் பகுதியில் மேற்பார்வை மட்டப் பதவியில் இரண்டு வருடத்திற்குக்குறையாத அனுபவம்.

அல்லது

ஐக்கிய ராச்சியத்தின் கணக்குப் பதிவினர் நிறுவனத்தில் இடைநிலைப் பரீட்சையில் சித்தியுடன் அங்கீகரிக்கப்பட்ட வர்த்தக கைத்தொழில் நிறுவனம் ஒன்றில் கணக்குப் பகுதியில் அல்லது கணக்காய்வுப் பகுதியில் மேற்பார்வை மட்டப் பதவியிலான நான்கு வருடத்துக்குக் குறையாத அனுபவம்

அல்லது

இ. கூட்டுறவு பணியாளர் (உயர்தரம்) பரீட்சையில் சித்தி அல்லது க.பொ.த. உயர்தரத்தில் கணக்கியலை ஒரு பாடமாகக் கொண்ட மூன்று பாடங்களில் 'சித்தியுடன் அங்கீகரிக்கப் பட்ட வர்த்தக கைத்தொழில் நிறுவனத்தின் கணக்கியல் அல்லது கணக்காய்வுப் பகுதியில் மேற்பார்வை மட்டப் பதவியிலான நான்கு வருடத்துக்குக் குறையாதஅனுபவம்.

வயதெல்லை – 18 – 45 வரை

தற்போது கூட்டுறவுச் சேவையிலுள்ள பணியாளராயின் வயதெல்லை ஏற்புடையதாகாது என்பதுடன் விண்ணப்பப் படிவங்கள் சம்பந்தப்பட்ட சங்கத்தின் ஊடாக அனுப்புதல் வேண்டும்.

விண்ணப்பங்கள் யாவும் 10.11.2005 ஆம் திகதிக்கு முன் பதிவுத் தபாலில் அனுப்பிவைக்கப்படல் வேண்டும். விண்ணப்பத்துடன், கல்வித்தகைமைச் சான்றிதழ், வதிவிட உறுதிப்படுத்தல், பிறப்பு அத்தாட்சிப் பத்திரம் என்பவற்றின் நிழற்பிரதி இணைக்கப்படல் வேண்டும்.

*முகவரி: –தலைவர்,*
*புதுக்குடியிருப்பு ப. தெ. வ. அ. கூ. சங்கம்,*
*குழந்தையேசு கோவில் வீதி,*
*8 ஆம்வட்டாரம்*
*புதுக்குடியிருப்பு,*
*முல்லைத்தீவு*

*மு. குறிப்பு: – கணினிப்பயிற்சிபெற்றவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.*

(சி.13118)



பொது சன நூலகம்

## சைவசமயப்பாடப் பரீட்சை பிற்போடல்

(பூநகரி)

கொழும்பு விவேகானந்த சபையினரால் நடாத்தப்படும் 75 ஆவது ஆண்டு அகில இலங்கை சைவ சமய பாடப்பரீட்சை சனாதிபதித் தேர்தலை முன்னிட்டு 27.11.2005 இற்கு பிற்போடப்பட்டுள்ளது என சபையின் செயலாளர் அறிவித்துள்ளார்.


03-10-2005 முதல் 01-11-2005 வரை

SALE SALE SALE SALE

தீபாவளி மலிவு விற்பனை

நீங்கள் வாங்கும் சகல பொருட்களுக்கும்

விசேட கழிவு

உடனே விஜயஞ்செய்யுங்கள்:

லைடன் புடைவை நிலையம்

இல. 410, ஆஸ்பத்திரி வீதி

(பஸ் நிலையம் முன்பாக), யாழ்ப்பாணம்.

☎ 222 2381 (சி-13019)


## இலங்கை ஜனநாயக சோசலிச குடியரசு

## பெருந்தெருக்கள் அமைச்சு

## வீதி அபிவிருத்தி அதிகாரசபை வ/கி (வடமாகாணம்)

# வழங்குநர்களையும் ஒப்பந்தக்காரர்களையும் பதிவு செய்தல்-2006

கீழே குறிப்பிட்டுள்ள வழங்கல்களையும், சேவைகளையும் வழங்குவதற்கு வீதி அபிவிருத்தி அதிகார சபையின் வடமாகாண பரிபாலனத்தின் கீழ் யாழ்ப்பாணம், முல்லைத்தீவு, வவுனியா பிரதம பொறியியலாளர் பிராந்தியங்களுக்குத் தம்மை பதிவு செய்து கொள்ள விரும்பும் வழங்குநர்கள், உற்பத்தியாளர்கள் ஒப்பந்தக்காரர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

**வழங்கல்கள்**

- 1.1 ஆற்றுமணல், கடற்கரை மணல்
- 1.2 சீர்செய்யப்படாத கற்கள்/ கல்லுடைக்கும் ஆலையில் உற்பத்தி செய்யப்பட்ட கற்கள்
- 1.3 கட்டடப்பொருட்கள் (செங்கட்டி, சீமெந்து, செரமிக்ஸ், அஸ்பெற்றோஸ்சிற், மாபிள்வகைகள்,இரும்புக்கம்பி, மரம், மின்சார உபகரணங்கள்) கண்ணாடி, பெயின்ற், வாணிஸ்
- 1.4 கொங்கிறீற் பைப்ஸ்
- 1.5 றோட் மாக்கிங் பெயின்ற்
- 1.6 வீதி அபிவிருத்தி வேலைகளுக்குப் பயன்படுத்தப்படும் உபகரணங்கள் ( வீல் பரோ, மண்வெட்டி, சவல்,கத்தி, காட்டுக்கத்தி போன்றன.)
- 1.7 வாகனங்களுக்குப் பயன்படுத்தப்படும் ரயர், ரீயூப், பற்றரிகள்,ஒயில், டீசல்
- 1.8 காரியாலய வேலைகளுக்குப் பயன்படுத்தப்படும் காகிதாதிகள் போன்றன.
- 1.9 வாகன உதிரிப்பாகங்கள்
- 1.10 காரியாலய உபகரணங்களும், தளபாடங்களும்.

**சேவைகள்**

- 2.1 வீதி அபிவிருத்தி வேலைகளுக்குப் பயன்படுத்தப்படும் வாடகை வாகனங்கள்.(டோசர், மோட்டர்கிறேடர், லோடர்ஸ், பக்கோ, றோட்றோலர், ரிப்பர் லொறி, ரக்ரர், வைபிறேட்டிங்றோலர்) வாகன வாடகை சேவை வழங்க இருக்கும் வழங்குநர்கள் வாகனங்களுக்குரிய அனைத்து ஆவணங்களும் (வாகனப்புத்தகம், வரி, காப்புறுதி) உரிமையாளர் பெயரில் காணப்படல் வேண்டும.
- 2.2 வாகனத்திருத்த வேலைகளும், சுத்திகரிப்பு

**பதிவு தொடர்பாக பொது நிபந்தனைகள்**

- 3.1 விண்ணப்பிக்க விரும்பும் வழங்குநர்கள்/ ஒப்பந்தக்காரர்களும் கீழ்குறிப்பிடப்பட்ட விண்ணப்பப்படிவ மாதிரியினை தயார் செய்து பூரணப்படுத்தி அதற்குரிய ஆவணங்களுடன் மாகாணப்பணிப்பாளர், வ.கி(வடக்கு), கண்டிவீதி, வவுனியா என முகவரியிடப்பட்டு தபால் உறையின் இடதுபக்க மேல் மூலையில் தெளிவாக வழங்குநர்களைப் பதிவு செய்தல் - 2006......... பிராந்தியம் (3.3 இல் குறிப்பிடப்பட்டபடி பிரிவுகள் குறிப்பிடப்பட வேண்டும்) எனக் குறிப்பிட்டு 18.11.2005 இற்கு முன்னர் கிடைக்கக் கூடியதாக அனுப்பி வைத்தல் வேண்டும்
- 3.2 ஒவ்வொரு பிரதம பொறியியலாளர் பிராந்தியத்திற்கும் தனித்தனி வழங்கல், சேவைகளிற்கு விண்ணப்பிக்கும் பொழுது பிரிவு ஒவ்வொன்றிற்கும் மீளளிக்கப்படாத கட்டணமாக ரூபா 230 வீதம் காசுக்கட்டளையாகவோ அன்றி வங்கிக்கட்டளையாகவோ (பெறுமதி சேர் வரி உட்பட) மாகாணப்பணிப்பாளர், வீதி அபிவிருத்தி அதிகாரசபை, வவுனியா அவர்களின் பெயரில் எடுக்கப்பட்டு விண்ணப்பப்படிவங்களுடன் இணைத்து அனுப்புதல் வேண்டும்.
- 3.3 ஒவ்வொரு பிரிவிற்கும் தனித்தனி வழங்கல்களிற்கும், சேவைகளிற்கும் விண்ணப்பப்படிவங்கள் அனுப்பும்போது ஒவ்வொரு பிராந்தியத்திற்கும் தனித்தனியான விண்ணப்பங்களை அனுப்புதல் வேண்டும்.
- 3.4 விநியோகத்தர்கள் தமது பெயர்களை இவ் அதிகாரசபையில் பதிவு செய்ததன் பின்னர் நாம் கோரும் கேள்விப்பத்திரங்களுக்குத் தொடர்ந்து மூன்று முறை விலைமதிப்பினைச் சமர்ப்பிக்காவிடினும், விநியோகிக்க ஒப்புக்கொண்ட பொருட்களையோ/ சேவைகளையோ குறிப்பிட்ட கால எல்லைக்குள் விநியோகிக்காவிடினும், கேள்விப்பத்திரத்தில் குறிப்பிட்ட மாதிரிப் பொருட்களையோ/ சேவைகளையோ வழங்காவிடினும் தங்கள் பதிவுஎவ்வித அறிவித்தலுமின்றி இரத்துச் செய்யப்படும். இவ்வாறான சேவைக்கோ, பொருட்களுக்கோ எவ்வித கொடுப்பனவும் வழங்கப்படமாட்டாது..
- 3.5 2006 ஆம் ஆண்டிற்கான கேள்விப்பத்திரங்கள்யாவும் பதிவு செய்யப்பட்ட வழங்குநர்களிடமிருந்தும், விநியோகத்தர்களிடமிருந்துமே கோரப்படும். இருப்பினும், அவசியம் ஏற்படும் பட்சத்தில் வேறு ஸ்தாபனங்களில் இருந்து பொருட்களையோ, விநியோகங்களையோ பெற்றுக்கொள்வதற்கான மீள் பரிசீலனையைச் செய்வதற்கு கேள்விச்சபைக்கு அதிகாரமுண்டு
- 3.7 எவ்விண்ணப்பங்களையும் எவ்வித கொடுப்பனவுமின்றி தள்ளுபடி செய்வதற்கு கேள்விச்சபைக்கு அதிகாரமுண்டு.

**எந்திரி.மோசஸ் மரியதாசன்,**
**மாகாணப்பணிப்பாளர் வ.கி (வ),**
**வீ.அ.சபை.வவுனியா.**
T.P 024.2222942

*வழங்குநர்களையும், ஒப்பந்தக்காரர்களையும் 2006 ஆம் ஆண்டுக்கு பதிவு செய்வதற்கான மாதிரி விண்ணப்பப்படிவம்*

*...................... பிராந்தியம்*

1. பெயரும் முகவரியும் :-...............................
2. பண்டங்கள், சேவைகள் வரி,பதிவு செய்யப்பட்டதற்கான இலக்கம். :-...............................
3. என்ன வகையான வழங்கல்/சேவைக்காக விண்ணப்பிக்கிறீர்கள் (பிரிவு இலக்கத்தினை குறிப்பிடவும்) :-...............................
4. தொலைபேசி இலக்கம் தொலைநகல் இலக்கம் :-...............................
5. தங்கள்கணக்கிருக்கும் வங்கியின் பெயர் :-...............................
6. பணக்கொடுப்பனவுக்கான கால எல்லை :-...............................
7. 2005ஆம் ஆண்டில் எந்தெந்த அரசாங்க திணைக்களகங்களுக்கு வழங்கல்களும், சேவைகளும் செய்ததற்கான..விபரம்... ...............................................

திகதி

விண்ணப்பதாரியின் கையொப்பம்,
(வியாபார அலுவலக முத்திரை)

(சி-13121)

## வீடமைப்பு மற்றும் நிர்மாணக் கைத்தொழில், கிழக்கு மாகாண கல்வி மற்றும் நீர்ப்பாசன அபிவிருத்தி அமைச்சு

# கட்டடத்திணைக்களம்

# கேள்வி கோரல்

உயர்கட்டமைப்பு R.C.C வேலைகளுக்காக யாழ்ப்பாணப்பல்கலைக்கழகத்தில் (கட்டம்IIபகுதிII) இயற்கை விஞ்ஞான தொகுதியை நிர்மாணித்தல்.

01 யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் (கட்டம் II பகுதிII, உயர்கட்டமைப்பு R.C.C வேலைகள் ) இயற்கை விஞ்ஞான தொகுதியினை நிர்மாணிப்பதற்கான பொறியிடப்பட்ட கேள்விகள் வீடமைப்பு மற்றும் கைத்தொழில் நிர்மாண கிழக்கு மாகாண கல்வி மற்றும் நீர்ப்பாசன அபிவிருத்தி அமைச்சு கேள்விச் சபைத் தலைவரால் பெற்றுக்கொள்வார். மேலும் பெறுவதானது 2005 நவம்பர் 22ஆம் திகதி மு.ப. 10 மணிக்கு மூடப்படும்.

02 கேள்வி ஆவணங்களை யாழ்ப்பாணம், பீச்வீதி கட்டடங்கள் திணைக்களம், பிரதமபொறியியலாளர் (யாழ்ப்பாணம்) அவர்களிடமிருந்து 2005 நவம்பர் 27 ஆம் திகதி முதல்வேலை நாட்களில் மு.ப 9.00 முதல் பி.ப 3.30 வரை மீளளிக்கப்படாத கேள்விக் கட்டணமாக ரூபா ஆயிரம் (RS.1000/=) செலுத்தி ICTAD இனால் வழங்கப்பட்ட ஒப்பந்தக்காரர்கள் பதிவுப் புத்தகம் மற்றும் NCASL அங்கத்துவ அட்டையையும் சமர்ப்பிக்கும் கேள்விதாரர்களுக்கே கேள்வி ஆவணங்கள் விநியோகிக்கப்படும்.

03 கேள்விதாரர்கள் பின்வரும் தகைமைகளைக் கொண்டிருத்தல் வேண்டும்.

I நிர்மாணப் பயிற்றுவிக்கும் மற்றும் அபிவிருத்தி நிறுவனத்தால் அபிவிருத்தி செய்யப்பட்ட நிர்மாண ஒப்பந்தக்காரர்களின் தேசிய பதிவு (ICTAD) மற்றும் தரப்படுத்தல் திட்டத்தின் கீழ் தரம் M4 மற்றும் அதற்கு மேல் கட்டட நிர்மாண ஒப்பந்தக்காராகப் பதிவு செய்து இருப்பதோடு.

II இலங்கை தேசிய நிர்மாண ஒப்பந்தக்காரர்கள் சங்க அங்கத்தவராயுமிருத்தல் (NCASL) வேண்டும்.

04 கேள்வி ஆவணங்களை யாழ்ப்பாணம் பீச் வீதி, கட்டடங்கள் திணைக்கள பிரதம பொறியியலாளர் அலுவலகத்தில் (யாழ்ப்பாணம்) இலவசமாகப் பார்வையிடலாம்.

05 கேள்விகள் சமர்ப்பிக்கப்படும் இறுதித் திகதியிலிருந்து 90 நாட்களுக்கே கேள்விகள்செல்லுபடியாகும் மேலும் ரூபா எழுநூறுஆயிரம் (Rs.700.000/=) கேள்விப்பிணையுடன் சேர்த்து சமர்ப்பிக்கப்படல்வேண்டும்.

06 பொறியிடப்பட்ட கேள்விகள் நேரில் அல்லது பதிவுத்தபால் மூலம் பத்தரமுல்ல "செத்திரிபாய " 2 ஆம் மாடி வீடமைப்பு மற்றும் நிர்மாணக் கைத்தொழில் கிழக்கு மாகாண கல்வி மற்றும் நீர்ப்பாசனத் திணைக்கள அமைச்சு பணிப்பாளர் சேவைகள் மே/பா அமைச்சு, கேள்விச்சபை தலைவர் அவர்களுக்கு முடிவு நேரத்துக்கு முன்னர் அனுப்பப்படவேண்டும்.

07 கேள்விகள் மூடப்பட்டவுடன்பத்தரமுல்ல, "செத்சிரிபாய" 2ஆம் மாடி, வீடமைப்பு மற்றும் நிர்மாணக் கைத்தொழில், கிழக்கு மாகாண கல்வி மற்றும் நீர்ப்பாசனத்திணைக்கள அமைச்சின் மாநாட்டு அறை Bயில் உடன் திறக்கப்படும். கேள்விதாரர் அல்லது அவர்களது அங்கீகாரம் பெற்ற பிரதிநிதிகள் சமுகமளிக்கலாம்.

08 கேள்விதாரர்கள் "செத்சிரிபாய" வளவுக்குள் உட்பிரவேசிக்கும் போது பாதுகாப்பு பரிசோதனைகளுக்கு உட்படுத்தப்படுவர் என அறியத்தருகின்றோம்.

09 விருப்பமுள்ளவர்கள் யாழ்ப்பாணம், பீச் வீதி, கட்டடங்கள் திணைக்களம், பிரதம பொறியியலாளர் (யாழ்ப்பாணம்) அவர்களைமேலதிக விபரங்களுக்கு தொடர்பு கொள்ளவும் (தொலைபேசி:-021.2222781)

W.S மொல்லிகொட,
கட்டடங்கள் பணிப்பாளர்,
கட்டடங்கள் திணைக்களம்,
செத்சிரிபாய பத்தரமுல்ல.

WWW.builbings.gov.lk

(சி-13126)


தீபாவளிக்கான

மாபெரும் மலிவு விற்பனை

- கண்ணைக்கவரும் கட்டிங் காட்டுகள் (இந்தியா, சிங்கப்பூர், இலங்கை)
- இலங்கையின் முன்னணி வெளியீட்டாளர்களான ஸ்ரீவமஸ், சுஜிகவா,நியூகவா,ஞானம்ஸ் போன்றோரின் வாழ்த்துக்கள்.
- உங்கள் எண்ணம்போல் நீங்கள் கேட்ட விலையில் பெற்றுக் கொள்ளலாம்.

வியாபாரிகளுக்கு விசேட கழிவு

பூபாலசிங்கம் புத்தகசாலை
இல.4, ஆஸ்பத்திரிவீதி,
யாழ்ப்பாணம். தெ.பேசி-6693 (சி.13125)

## கரைச்சிப் பிரதேச செயலர் பிரிவு உதைபந்தாட்டப் போட்டிகள்!

(கிளிநொச்சி)

கிளிநொச்சி மாவட்ட விளையாட்டு அபிவிருத்திச் சபையினர் நடாத்தும் கரைச்சிப் பிரதேச செயலர் பிரிவு கழகங்களுக்கிடையிலான உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியின் இரண்டாவது சுற்றுப் போட்டிகள் இன்று ஆரம்பமாகின்றது.

கிளிநொச்சி உயதாரகை விளையாட்டு மைதானத்தில் நடந்துவரும் லீக் முறையிலான இப்போட்டித் தொடரின் இராண்டவது சுற்றுக்கு லக்கிஸ்ரார், உருத்திரபுரம், உழவர் ஒன்றியம், ஸ்கந்தா ஆகிய நான்கு அணிகள் தெரிவாகியுள்ளன.

இன்று நடைபெறவுள்ள போட்டிகளில் லக்கிஸ்ரார் அணியை எதிர்த்து ஸ்கந்தா அணி முதலாவது போட்டியிலும், உழவர் ஒன்றிய அணியை எதிர்த்து உருத்திரபுரம் அணி இரண்டாவது போட்டியிலும் மோதவுள்ளன.

## சகலதுறை ஆட்டக்காரராக பதானை ஆக்குவதற்கு முயற்சி



இந்திய அணியில் முன்பு கபில்தேவ், ரவிசாஸ்திரி, மதன்லால், மனோஜ் பிரபாகர் என இருந்தனர். இப்போது சகலதுறை வீரர்கள் என சொல்லும் அளவுக்கு வீரர்கள் இல்லை. ஆனால் இர்பான் பதானுக்கு பந்து வீச்சும் நன்றாக வருகிறது. துடுப்பாட்டத்தில் சிறப்பாக செயற்படுகிறார். அவரை சகல துறைவீரராக்கும் முயற்சி நடந்து வருகிறது. பயிற்சியாளர் கிரேக்சப்பல் இதற்காக அவருக்கு தீவிரமாக பயிற்சி அளித்து வருகிறார்.

இந்திய அணியில் இதுவரை பதான் ஆறாவது வீரராகவே களம் இறக்கப்பட்டார். ஆனால் நேற்று நாக்பூரில் நடந்த இலங்கைக்கு எதிரான போட்டியில் முதல் முறையாக மூன்றாவது வீரராக களம் இறங்கினார்.

இதற்கு நல்ல பலன் கிடைத்தது. இலங்கை பந்து வீச்சை துவம்சம் செய்து சிக்சர்,பவுண்டரி எடுத்த பதான் அதிகபட்ச 83 ஓட்டங்கள் எடுத்தார். இதற்கு முன்பு அவர் பாகிஸ்தானுக்கு எதிராக 64 ஓட்டங்கள் எடுத்து இருந்ததே அதிக பட்சமாக இருந்தது.

பதானை நேற்று மூன்றாவது வீரராக களம் இறக்கியது 'கிளிக்' ஆகி இருக்கிறது. அதே போல் தொடர்ந்து மூன்றாவது வீரராக களம் இறக்க திட்டமிட்டுள்ளனர். ஆனால் இது தொடர்ந்து பலன் அளிக்குமா? என்பது போக போகத்தான் தெரியும்.




### அவுஸ். அணியில் இடம்பிடிக்க

## திறமையை வெளிப்படுத்த வேண்டிய நிலையில் வீரர்கள்

எதிர்வரும் மூன்றாம் திகதி ஆரம்பமாகும் மேற்கிந்திய தீவுகள் கிரிக்கெட் அணியுடனான டெஸ்ட் தொடரில் அவுஸ்திரேலிய அணியில் இடம்பிடிக்க பல முன்னணி வீரர்கள் தனது திறனை வெளிப்படுத்த வேண்டிய நிலையில் இருப்பதாக அறியவருகிறது.

அதன்படி அண்மையில் நடைபெற்ற உலக பதினொருபேர் அணியுடனான சுப்பர் சீரிஸ் தொடரில் ஒன்பது விக்கெட்டுக்களை வீழ்த்திய ஸ்நுவட் மாக்கில் அணியில் இணைய எதிர்பார்த்துள்ளார். அத்துடன் அங்கு உள்ளூரில் நடைபெறவிருக்கும் போட்டியில் அவர் தனது திறனை வெளிப்படுத்தவேண்டிய நிலையில் இருக்கிறார்.

ஆயினும் பிரிஸ்பேனில் நடைபெறும் முதலாவது போட்டியில் இரு சுழற்பந்து வீச்சாளர்களை இணைக்க தேர்வாளர்கள் தயக்கம் காட்டிவருகின்றனர்.

### ஆசிய ஜேர்மன் விளையாட்டுப் பரிமாற்றுத் திட்டம்

## தாயகத்தில் சிறுவர்களுக்கான விளையாட்டுப் பயிற்சி குறித்து சில முடிவுகள்!



சிறுவர்களுக்கான விளையாட்டுப் பயிற்சி முறைகள் பற்றியும், எமது தாயகத்தில் சிறுவர்களுக்கான பயிற்சிகளை எவ்வாறு மேற்கொள்வது என்பது பற்றியும் நேற்று இளையோர் செயற்பாட்டு நிறுவனத்தில் நடைபெற்ற ஆசிய ஜேர்மன் விளையாட்டுப் பரிமாற்றுத் திட்ட (A.G.S.E.P.) நிறுவனத்தைச் சேர்ந்த விளையாட்டுப் பயிற்றுனர்களுடான சந்திப்பில் முடிவெடுக்கப்பட்டதாக மேற்படி நிறுவனத்தினர் தெரிவித்துள்ளனர்.

தமிழீழ விளையாட்டுத்துறைப் பொறுப்பாளர் கி. பாப்பா அவர்களுடனான சந்திப்பிலேயே இம்முடிவெடுக்கப்பட்டுள்ளது.

இறுதியில் சிறுவர்களுக்கான பயிற்சித் திட்டங்களை மேற்கொள்வதற்கு இலகுவாக சிறுவர்களுக்கான கல்வித் திட்டங்களை மேற்கொள்ளும் ஆசிரியர்களுக்கு முதற்கட்டமாக இதற்கென ஜேர்மன் பயிற்றுனர்களால் விசேடமாக வடிவமைக்கப்பட்ட பயிற்சி முறைகளை பயிற்றுவிப்பதென தீர்மானிக்கப்பட்டது. பயிற்றுனர்களால் விசேட பயிற்சி நெறி வடிவமைக்கப்பட்டதும் பயிற்சிகள் ஆரம்பமாகும். இச்சந்திப்பில் தமிழீழ விளையாட்டுத்துறையின் செயலாளர் அன்ரன் அன்பழகன், இளையோர் செயற்பாட்டு நிறுவன பணிப்பாளர் விழி ஆகியோரும் கலந்து கொண்டனர்.

## ஒன்பதாவது முறையாக தவறவிடப்பட்ட சதம்



இந்திய நட்சத்திர கிரிக்கெட் வீரர் டெண்டுல்கர் ஒருநாள் கிரிக்கெட் போட்டியில் ஒன்பதாவது முறையாக நேற்று முன்தினம் சதம் அடிக்கத் தவறினார்.

இடது முழங்கையில் ஏற்பட்ட காயம் காரணமாக இவர் கடந்த மே மாதம் சத்திரசிகிச்சை செய்து கொண்டார். அதன் பின்னர் நடந்த சில தொடர்களில் இதன் காரணமாக டெண்டுல்கர் ஆடவில்லை.

சுமார் ஆறு மாதகால இடைவெளிக்குப் பின்னர் இலங்கைக்கு எதிரான நேற்றைய ஆட்டத்தில் காயம் குணமடைந்து டெண்டுல்கர் ஆடினார். நீண்ட இடைவெளிக்குப் பின்னர் டெண்டுல்கர் ஆடியதால் எப்படி ஆடப்போகிறாரோ? என்ற எதிர்பார்ப்பு ரசிகர்களிடையே இருந்தது. ஆனால் அனைவரது வாயையும் அடைக்கும் விதத்தில் டெண்டுல்கரின் ஆட்டம் மிகவும் அற்புதமாக இருந்தது. ஆயினும் சிறப்பாக ஆடிய அவர் சதம் அடிப்பார் என்று எதிர்பார்த்த நிலையில் 93 ஓட்டங்களுக்கு ஆட்டமிழந்தார். 90 ஓட்டங்களுக்கு மேல் எடுத்து சதம் அடிக்காமல் டெண்டுல்கர் அவுட் ஆனது இது ஒன்பதாவது முறையாகும். டெண்டுல்கரின் நேற்றைய அரைச்சதம் ஒருநாள் கிரிக்கெட் போட்டியில் அவரின் 70 ஆவது அரைச்சதமும் இலங்கைக்கு எதிரான அவரது 12 ஆவது அரைசதமும் இதுவாகும்.

## இந்திய கிரிக்கெட் வீரர்களால் வேட்டையாடப்பட்டோம்



இந்திய கிரிக்கெட் அணி வீரர்களால் வேட்டையாடப்பட்டோம் என்று சிறிலங்கா கிரிக்கெட் அணித் தலைவர் அத்தப்பத்து கூறியுள்ளார்.

இந்திய அணிக்கு எதிரான தோல்வி குறித்து சிறிலங்கா அணித்தலைவர் அத்தப்பத்து மேலும் கூறியதாவது; இந்திய அணியின் பெரிய வெற்றிக்கு டெண்டுல்கரின் சிறப்பான ஆட்டம்தான் முக்கிய காரணமாகும். டெண்டுல்கர் முழுத்திறமையையும் வெளிப்படுத்தி ஆடினால் அவரைக் கட்டுப்படுத்துவது மிகவும் கடினமான விடயமாகும். டெண்டுல்கரும் பதானும் இணைந்து சிறப்பாக ஆடி எங்களை நிலைகுலையச் செய்துவிட்டனர்.

தொடக்கத்தில் ஆடுகளம் துடுப்பாட்டத்துக்கு சாதகமாக இருந்தது. பின்னர் அது மாறிவிட்டது. ஆரம்பத்தில் விக்கெட்டுக்களை .விரைவில் இழந்ததால் வெற்றியை நெருங்கக்கூட முடியவில்லை. இந்திய அணியினர் நடத்திய வேட்டைக்கு நாங்கள் பலியானோம் எனத் தெரிவித்தார்.

## இங்கிலாந்துடனான பரபரப்புத் தொடர் நொந்துபோன மக்களை மகிழ்விக்கும்!

### பாக். கிரிக்கெட் அணித்தலைவர்



இங்கிலாந்துடனான பரபரப்பான கிரிக்கெட் போட்டிகள் கடந்த எட்டாம் திகதி தமது நாட்டில் ஏற்பட்ட பூகம்ப அனர்த்தத்தால் நொந்துபோயுள்ள மக்களை மகிழ்விக்கும் ஒரு வைத்தியமாக இருக்கும் என பாகிஸ்தான் கிரிக்கெட் அணித்தலைவர் இன்சமாம் உல்ஹக் தெரிவித்துள்ளார்.

கடந்த வருடம் தெற்காசிய நாடுகளை உலுக்கிய சுனாமி அனர்த்தத்தால் உடல் உளப்பாதிப்பிற்குள்ளானவர்களுக்காக உலக பதினொரு பேர் அணிக்கும், அவுஸ்திரேலிய அணிக்குமிடையில் போட்டிகள் நடத்தப்படுவதைக் குறிப்பாக உணர்த்தியுள்ள அவர் இவ்வாறான நிலைமைகளில் கிரிக்கெட் போட்டிகள் கைகொடுப்பதாக தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் கூறும்போது;பூகம்பத்தால் பெறுமதியான பல உயிர்கள் இழக்கப்பட்ட போதும் இங்கிலாந்து கிரிக்கெட் அணி இங்கு போட்டிகளில் பங்குபற்றுவது பாதிக்கப்பட்டுள்ளவர்களை மகிழ்விக்க உதவும் என்றார்.

இந்த அனர்த்தத்தில் 53 ஆயிரம் பேர் பலியாகியும் பல இலட்சம் பேர் அகதிகளுமாகினர். நேற்று வருகைதந்த இங்கிலாந்து அணி வரும் திங்களன்று பாகிஸ்தான் கிரிக்கெட் சபைத்தலைவர் பதினொரு பேர் அணியுடன் மூன்று நாள் பயிற்சிப் போட்டியில் பங்குபற்றும். எனினும் இப்போட்டியில் சகலதுறை வீரர் அன்ரு பிளின்டொப், ஸ்றிவ் கார்மிசன் ஆகியோர் பங்குபற்ற மாட்டார்கள். அவ்விருவரும் டுபாயில் பூகம்ப அனர்த்த நலநிதி சேகரிப்பு நிகழ்வொன்றில் பங்கேற்பதால் ஒருவாரம் கழிந்த பின்னரே அவர்கள் பாகிஸ்தான் செல்வர்.

ஏற்கனவே பாகிஸ்தான் கிரிக்கெட்சபை இதற்காக 485 ஆயிரம் பவுணை நன்கொடையாக வழங்கியுள்ளமை குறிப்பிடத்தக்கது. இதற்கிடையில் பாகிஸ்தான் வரும் இங்கிலாந்து அணிக்கு அரச பிரதிநிதிகளுக்கு வழங்கப்படும் உயர்வான பாதுகாப்பு அளிக்கப்பட்டிருப்பதாக தெரிவிக்கப்படுகிறது. முதலாவது டெஸ்ட் போட்டி வரும் ஆறாம் திகதி முல்டானில் ஆரம்பமாகும்.

## இந்திய அணியின் முயற்சிக்கு கிடைத்த வெற்றி!

### இந்திய அணித்தலைவர் ராவிட்



இந்திய அணியின் கூட்டு முயற்சிக்கு கிடைத்த வெற்றி என்று அணித்தலைவர் ராவிட் தெரிவித்துள்ளார்.

இலங்கை அணிக்கு எதிரான வெற்றி குறித்து இந்திய கிரிக்கெட் அணித் தலைவர் மேலும் தெரிவிக்கும் போது பதானை இரண்டாவது வீரராக களம் இறக்க வேண்டும் என்று டெண்டுல்கர் யோசனை வழங்கினார் என்றும் டெண்டுல்கரின் இந்த யோசனையை பயிற்சியாளரிடம் தெரிவித்ததாகவும் அவரும் இதற்கு சம்மதம் தெரிவித்தார் என்றும் தெரிவித்ததுடன், பதானை அப்படி முன்கூட்டி களம் இறக்கியதைப் பார்த்து இலங்கை அணியினரே ஆச்சரியப்பட்டு இருப்பர். எங்களின் இந்த முயற்சிக்கு நல்ல பலனும் கிடைத்தது. அதிர்ஷ்டம் எங்கள் பக்கம் இருந்தது என்றும் கூறியுள்ளார்.

போட்டி தொடங்குவதற்கு முன்பு பதற்றமாக இருந்தது. டெண்டுல்கரும், பதானும் சிறப்பாக ஆடி பதற்றத்தைப் போக்கிவிட்டனர். டெண்டுல்கர் அற்புதமாக ஆடி பழைய திறமையை வெளிப்படுத்தினார். அவர் அற்புதமான ஆட்டக்காரர் ஆவார். டெண்டுல்கர் இடம்பெற்றாலே அணியில் தானாகவே நல்ல மாற்றம் ஏற்படுகிறது.

மைதானத்திற்கு உள்ளேயும், வெளியேயும் டெண்டுல்கரின் பங்களிப்பு அற்புதமாகவுள்ளது. காயத்தில் இருந்து மீண்டும் அவர் அணியில் இடம்பெற்றிருப்பது மகிழ்ச்சி அளிக்கிறது. இலங்கைக்கு எதிரான இந்த வெற்றி அணியின் கூட்டு முயற்சிக்கு கிடைத்த வெற்றி ஆகும். சுழற்பந்து வீச்சாளர்களின் பங்களிப்பும் சிறப்பாக இருந்தது.

சிறப்பாக துடுப்பாட்டம் செய்ததால் பதானுக்கு சகலதுறை வீரர் என்ற முத்திரையை குத்த வேண்டாம். சகலதுறை வீரர் என்ற தகுதியைப் பெற அவருக்கு நீண்டகாலம் ஆகும். அவர் துடுப்பாட்டம் செய்யும் ஒரு பந்து வீச்சாளர் ஆவார். அவரது முதல் வேலை சிறப்பாக பந்து வீசுவதுதான். அதற்காக இங்கிலாந்து சகலதுறை வீரர் பிளிண்டொப்புடன், பதானை ஒப்பிட்டுக் கூறுவது தற்போதைக்கு சரியல்ல. இந்த வெற்றியின் மூலம் இலங்கை அணியைக் குறைத்து மதிப்பிட மாட்டோம். மேலும் நடக்க உள்ள ஆறு போட்டிகளிலும் கடுமையான சவால் காத்துக்கொண்டு இருக்கிறது என்றே நினைக்கிறேன் இவ்வாறு ராவிட் கூறினார்.

## சிந்தனைக்கு



பேரினவாதச் சித்தாந்தப் பிடியிலிருந்து விடுதலைபெற்று விழிப்புணர்வு அடையும்பொழுதுதான், தமிழரின் சுதந்திரப் போராட்டத்தின் புரட்சிகரத் தன்மையைச் சிங்கள மக்கள் புரிந்துகொள்வார்கள்.

தமிழீழ தேசியத் தலைவர்.


ஈழநாதம்
மக்கள் நாளிதழ்
யாழ்.சாலை,கிளிநொச்சி. 27.10.2005



தொலைபேசி 060-2213244
தொலைநகல் 021-2283948
மின் அஞ்சல் natham23 ela@ yahoo.com


# சுதந்திரக்கட்சியின் எதிர்காலம்!

சிறிலங்காவிற்கான ஐந்தாவது சனாதிபதித்தேர்தலில் யார் வெற்றிபெறினும் சரி சிறிலங்கா சுதந்திரக்கட்சி பெரும் நெருக்கடியை எதிர்கொள்ளப் போவது தவிர்க்க முடியாததாகவே இருக்கும். ஏனெனில் சிறிலங்கா சுதந்திரக்கட்சியில் பிளவு என்பது இன்றே ஊர்ஜிதப்படுத்தப்பட்டது போலுள்ளது.

சனாதிபதி சந்திரிகா குமாரதுங்க சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் வேட்பாளர் மகிந்தராஜபக்ஷ தற்பொழுதே கட்சியின் கொள்கைக்கு மாறாகச் செயற்படத் தொடங்கிவிட்டதாகப் பகிரங்கமாகக் குற்றம் சாட்டியுள்ளார். சனாதிபதி வேட்பாளருக்கு ஆதரவாக இதுவரை பிரச்சாரம் செய்யவும் அவர் தயாராகவில்லை.

இதேவேளை சனாதிபதி சந்திரிகா தமது கட்சி வேட்பாளருடனான நல்லுறவைவிட எதிர்க்கட்சித்தலைவர் ரணில்விக்கிரமசிங்கவுடன் நெருக்கமான உறவை வைத்துக்கொள்ள விரும்புவது போன்றே தெரிகின்றது. இது தொடர்பான முன்முயற்சிகளும் எடுக்கப்பட்டுவிட்டன.

சனாதிபதி சந்திரிகாவைப் பொறுத்து இன்றுள்ள முக்கிய பிரச்சினை சிறிலங்கா சுதந்திரக்கட்சியைப் பாதுகாப்பது என்பதும் அக்கட்சியின் கட்டுப்பாடு பண்டாரநாயக்காக்களின் கைகளில் வைத்துக்கொள்வது என்பதுமே ஆகும். எக்காரணம் கொண்டும் கட்சியின் தலைமைத்துவம் கைநழுவிப்போக இடமளித்துவிட முடியாது.

இதேசமயம் சனாதிபதி வேட்பாளர் மகிந்தராஜபக்ஷ மீது சனாதிபதி சந்திரிகா நம்பிக்கை கொள்ள எதுவித அடிப்படையும் இல்லை. மகிந்த ராஜபக்ஷ சிறிலங்கா சுதந்திரக்கட்சியில் குறிப்பாக சனாதிபதி சந்திரிகாவின் விசுவாசியாக இருந்தவர் தான். ஆயினும் தற்பொழுது அவரின் நடவடிக்கைகள் யாவும் அதிகாரத்தைக் கைப்பற்றுவதற்கானதாகவுள்ளதே ஒழிய சந்திரிகாவிற்கோ, சிறிலங்கா சுதந்திரக்கட்சிக்கோ விசுவாசமாக இருப்பதாக இல்லை.

இந்நிலையில் சனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்காக்களையும் சிறிலங்கா சுதந்திரக்கட்சியையும் காக்க வேண்டிய பொறுப்பு தன்னிடத்தே உள்ளதெனக் கருதுகின்றனர். இதற்கான முன்முயற்சியே ரணில் விக்கிரமசிங்கவுடன் சனாதிபதி சந்திரிகா காண முற்படும் இணக்கப்பாடாகும்.

மகிந்த ராஜபக்ஷ சிறிலங்கா சுதந்திரக்கட்சியின் கொள்கைகளைப் பேணப்போவதில்லை என்பது ஜே.வி.பி, ஜாதிக ஹெலஉறுமயவுடன் அவர் கூட்டுச்சேர்ந்தபோதே வெளிப்பட்டுவிட்டதொன்றாகும். அதிலும் குறிப்பாக சனாதிபதி சந்திரிகா ஜே.வி.பி யுடன் உடன்பாட்டிற்குச்செல்வதை ஆட்சேபித்திருந்தபோதும் மகிந்தராஜபக்ஷ உடன்பாட்டைச் செய்துகொண்டமை இதனை ஊர்ஜிதப்படுத்துவதாகியது.

மேலும் ஜே.வி.பி யுடன் உடன்பாடு வைத்துக்கொண்டாலும், சிறிலங்கா சுதந்திரக்கட்சியின் கொள்கைக்கும் நடைமுறைகளுக்கும் ஒழுங்குவிதிகளுக்கும் அனுசரித்தபோக்கை மகிந்த ராஜபக்ஷ கடைப்பிடிப்பார் என்ற எதிர்பார்க்கை சனாதிபதி போன்றோரிடம் இருந்தது. ஆனால் தற்போது அவரின் நடவடிக்கைகள் அத்தகைய எதிர்பார்ப்புக்களைக்கூடச் சிதைப்பவையாகவே உள்ளது.

இதற்கு நல்லதொரு எடுத்துக்காட்டாக மகிந்தராஜபக்ஷ சனாதிபதியாகப் பதவியேற்கும் பட்சத்தில் பிரதமராக அநுரா பண்டாரநாயக்கவை நியமிப்பதென ஏற்றுக்கொள்ளப்பட்ட உடன்பாட்டை மகிந்தராஜபக்ஷ மீறுவதற்கு எத்தணிப்பதிலிருந்தே ஊகிக்க முடிகின்றது. அதாவது ஜே.வி.பியின் பிரச்சாரச் செயலாளர் விமல்வீரவன்சவிற்கு அவர் அப்பதவியை வழங்குதற்குத் தயாராக இருப்பதாகவே தெரிகின்றது.

அத்தகையதொரு நிலையில் சுதந்திரக்கட்சியையும், பண்டாரநாயக்காக்களையும் பாதுகாக்கவேண்டிய பொறுப்பு தன்னிடம் உள்ளதெனச் சந்திரிகா கருதுவது தவறாக மாட்டாது. இதற்கான முயற்சியாகவே ரணில் விக்கிரமசிங்கவுடன் சனாதிபதி சந்திரிகா நடத்தும் பேச்சுக்கள் உள்ளன. இதில் சனாதிபதி சந்திரிகா வெற்றிபெறுவாரா, இல்லையா என்பதை சனாதிபதித் தேர்தலே தீர்மானம் செய்யும்.

ஏனெனில் ரணில் விக்கிரமசிங்க தேர்தலில் வெற்றிபெறுவாரேயானால் சனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவின் எதிர்ப்பார்க்கை நிறைவேறுவதற்கு வாய்ப்புண்டு. அதாவது சுதந்திரக் கட்சி பலவீனம்அடையினும் கட்சி உயிர் வாழ்வதற்கும் பண்டாரநாயக்காக்க்ள் அரசியலில் நீடிப்பதற்கும் முடியும். ஏனெனில், ஐ.தே.க வின் வெற்றியுடன் சுதந்திரக்கட்சிக்குள் மகிந்த பலமிழக்க, ஜே.வி.பி.யினர் ஓடி ஒழியவேண்டியதாகவும் இருக்கும். குறிப்பாக அதன்தலைவர் சோமவன்ச நாட்டைவிட்டு ஓடுவது தவிர்க்க முடியாததாகவே இருக்கும்.

மாறாக மகிந்தராஜபக்ஷ வெற்றிபெறுவாரேயானால் சிறிலங்கா சுதந்திரக்கட்சியினதும் பண்டாரநாயக்காக்களினதும் எதிர்காலமும் கேள்விக்குள்ளாகுவது தவிர்க்கமுடியாது போகலாம். அதாவது சுதந்திரக்கட்சி இரண்டாக உடையலாம் அன்றி சுருக்கமடையலாம். இதேவேளை பண்டாரநாயக்காக்களின் சுமார் அரை நூற்றாண்டுகால அரசியலும் முடிவிற்கு வரலாம் அன்றி வலுவிழந்து போகலாம். அதாவது சிறிலங்காவில் "வாரிசு" அரசியல் முறைமை முடிவிற்கு வரலாம். இந்தவகையில் இத்தேர்தல் பண்டாரநாயக்காக்களின் எதிர்காலத்தையே தீர்மானிக்கும் ஒன்றாகலாம்.



# தென்பகுதியில் தமிழ்மக்கள் மீதான பொலிஸ் கெடுபிடிகளைத் தடுத்து நிறுத்துக!

### - தமிழ் தேசிய கூட்டமைப்பு வலியுறுத்து

(கொழும்பு)

கொழும்பு உட்பட தென் பகுதிகளில் தமிழர்கள் தேவையற்ற பொலிஸ் சோதனைக்கும், கெடுபிடிகளுக்கும் முகம் கொடுக்க வேண்டியுள்ளது. இது போன்ற மனிதாபிமானமற்ற செயற்பாடுகளைத் தடுத்து நிறுத்த நடவடிக்கை எடுக்குமாறு கோரி பொலிஸ் மா அதிபர் சந்திரா பெர்ணான்டோவுக்கு தமிழ் தேசிய கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் ஜோசப் பர்ராஜசிங்கம் கடிதமொன்றினை அனுப்பி வைத்துள்ளார்.

இக் கடிதத்தில் அவர் மேலும் தெரிவித்திருப்பதாவது:

அண்மைக் காலமாக கொழும்பிலும் அதன் சுற்றுப் புறங்களிலும் பொலிஸ் சோதனைச் சாவடிகளில் தமிழர்கள் தேவையற்ற சோதனைகளுக்கும் கெடுபிடிகளுக்கும் மீண்டும் முகம் கொடுக்க வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது.

அதே வேளை அவசரகால விதிகளைப் பயன்படுத்தி எதிர்வரும் சனாதிபதித் தேர்தலுக்கான பாதுகாப்பு நடவடிக்கை என்ற போர்வையில் பல தமிழ் இளைஞர்களும், யுவதிகளும் கைது செய்யப்பட்டு பொலிஸ் நிலையங்களில் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர். எனவே இது போன்ற தேவையற்ற செயற்பாடுகளை தடுத்து நிறுத்த நடவடிக்கை எடுக்குமாறு தங்களைக் கேட்டுக் கொள்கின்றேன். இது போன்ற பாரதூரமான நடவடிக்கைகளை தடுத்து நிறுத்த தவறும்பட்சத்தில் 2002ம் ஆண்டுக்கு முன்பான இருண்ட அவசரகால நிலைக்கு தமிழ் மக்கள் தள்ளப்படுவார்கள் எனத் தெரிவித்துள்ளார்.

# ரணில் விக்கிரமசிங்கவின் சூழ்ச்சி வலைக்குள் சுதந்திரக்கட்சியினர் சிக்கிவிடக்கூடாது

### - அமைச்சர் மங்கள சமரவீர அறிவுரை

(கொழும்பு)

பேச்சுவார்த்தை நடத்தவருமாறு சனாதிபதி சந்திரிகா குமாரதுங்க எதிர்க் கட்சித் தலைவருக்கு அழைப்பு விடுக்கவில்லை. இரண்டொரு மாதங்களுக்கு முன்னர் சனாதிபதியைச் சந்திக்க வேண்டும் என்று எழுத்து மூலம் எதிர்க் கட்சித் தலைவர் விடுத்த வேண்டுகோளிற்கு அமைவாகவே இப்பேச்சு வார்த்தைகள் இடம்பெற்றுள்ளன என அமைச்சர் மங்கள சமரவீர தெரிவித்துள்ளார். அத்தோடு ரணில் விக்கிரமசிங்கவின் சூழ்ச்சி வலைக்குள் சிறிலங்கா சுதந்திரக் கட்சியினர் சிக்கிவிடக் கூடாது எனவும் எச்சரிக்கை விடுத்துள்ளார்.

கொழும்பு இலங்கை மன்றக் கல்லூரியில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற சனாதிபதித் தேர்தல் தொடர்பாக பிரதமர் மகிந்த ராஜபக்ஷவின் பரப்புரைப் பிரிவினர் நடத்திய ஊடகவியலாளர் மாநாட்டில் உரை நிகழ்த்தும் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

ரணில் விக்கிரமசிங்கவிடம் இருந்துதான் பண்டாரநாயக்காக்களை பாதுகாக்க வேண்டி உள்ளது. விஜேவர்த்தன குடும்பம் அன்று முதல் இன்றுவரை பண்டாரநாயக்காக்களுக்கு எதிராகவும், சிறிலங்கா சுதந்திரக் கட்சிக்கு எதிராகவும் தொடர்ந்து சூழ்ச்சிகளை மேற்கொண்டு வருகின்றது.

தேசிய பிரச்சினைக்கு தீர்வுகாண இணக்கப்பாட்டுடன் செயற்பட வருமாறு சனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க பல தடவைகள் ரணிலுக்கு அழைப்பு விடுத்தார். ஆனால் அத்தனையையும் உதாசீனப்படுத்தி விட்டு தமிழ் மக்களின் நன்மை கருதி 2000 ஆம் ஆண்டு மேற்கொள்ளப்படவிருந்த அரசியல் அமைப்பு சீர்திருத்தத்தையும் எதிர்த்து பிரச்சினைகளைத் தீர்க்க விடாது தடுத்த ரணில் விக்கிரமசிங்க, பொது இணக்கப்பாடு தொடர்பாக தற்போது பேசுவது வேடிக்கையானது எனவும் தெரிவித்துள்ளார்.

# தேர்தல் வன்முறைகள் குறித்து 500 முறைப்பாடுகள்!

(கொழும்பு)

சனாதிபதித் தேர்தலுக்கான வேட்புமனுத்தாக்கல் செய்யப்பட்ட கடந்த ஏழாம் திகதியிலிருந்து இதுவரை தேர்தல் வன்முறைகள் மற்றும் தேர்தல் சட்ட விதிகளை மீறியமை தொடர்பாக சுமார் 500 முறைப்பாடுகள் கிடைக்கப் பெற்றுள்ளதாக பொலிஸ் தலைமையக வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

இதில் வன்முறைகள் பற்றி அதிகளவு முறைப்பாடுகளை ஜே.வி.பியினரே செய்துள்ளனர். ஐக்கிய தேசியக் கட்சிக்கு எதிராகவே இந்த முறைப்பாடுகள் செய்யப் பட்டுள்ளன.

தேர்தல் சட்ட ஒழுங்கு விதிகளை மீறியுள்ளமை தொடர்பில் ஐக்கிய மக்கள் சுதந்திர கூட்டமைப்பிற்கெதிராகவே அதிகளவு முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்றுள்ளன. இந்த முறைப்பாடுகளினுள் அதிகளவானவை அரச வாகனங்களைத் தேர்தல் கடமைகளுக்குப் பயன்படுத்துவது சம்பந்தமாகவே பதிவாகியுள்ளதாக சிரேஷ்ட பொலிஸ் அதிகாரியொருவர் தெரிவித்துள்ளார்.

# இறக்குமதித் தடை.

(கொழும்பு)

பறவைக்காய்ச்சல் தொற்றியுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ள நாடுகளில் இருந்து கோழி இறைச்சிகளை இறக்குமதி செய்வதற்கு சிறிலங்கா அரசாங்கம் தற்காலிகத் தடையை விதித்துள்ளது.

விலங்கு உற்பத்தி மற்றும் சுகாதார திணைக்களத் தலைவர் எஸ்.கே. அமரசேகர இந்தத் தகவலை வெளியிட்டுள்ளார்.

சிறிலங்காவிற்கு சிங்கப்பூரில் இருந்தே கோழி இறைச்சி இறக்குமதி செய்யப்பட்டு வருகிறது.

இதேவேளை இலங்கையில் பறவைக்காய்ச்சலைக் கட்டுப்படுத்தும் நடவடிக்கைகளுக்காக தமது திணைக்களம் சுமார் 250 மில்லியன் ரூபாவைக் கோரி அமைச்சரவைக்கு கடிதம் அனுப்பியுள்ளதாக அமரசேகர குறிப்பிட்டார். (32)

# மோசமான குற்றவாளிகளைப் போன்று சிறிலங்கா பொலிசார் செயற்படுகின்றனர்

## ஆசிய சட்ட தகவல் ஆதாரங்கள் மையம் கண்டனம்

சிறிலங்காவில் பொலிசாரால் தொடர்ச்சியாகவும், பரந்துபட்ட அளவிலும் சித்திரவதைகள் மேற்கொள்ளப்படுவதாக மனித உரிமை அமைப்பொன்று குற்றம் சாட்டியுள்ளது. மோசமான குற்றவாளிகளைப் போல சிறிலங்காவில் பொலிசார் செயற்படுவதாக ஹொங்கொங்கில் இருந்து செயற்படும் ஆசிய சட்டத் தகவல் ஆதாரங்கள் மையம் என்ற அமைப்பு அறிக்கையொன்றில் குற்றம் சாட்டியுள்ளது.

பாலியல் வல்லுறவு, தடுப்புக் காவலில் மரணம், மற்றும் சித்திரவதைகள் போன்ற கிட்டத்தட்ட நூறு சம்பவங்களைத் தாங்கள் பட்டியலிட்டு ஆவணப்படுத்தியுள்ளதாக இந்த மனித உரிமை அமைப்புக் கூறுகின்றது.

இலங்கைக்கென சிறப்புப் பிரதிநிதி ஒருவரை நியமிப்பது உட்பட பல்வேறு நடவடிக்கைகளை எடுக்க வேண்டும் எனவும், ஐக்கிய நாடுகள் நிறுவனத்தின் இந்த அறிக்கை கேட்டுள்ளது. எதிர்வரும் நவம்பர் மாதம், சித்திரவதைக்கெதிரான ஐ.நா. குழு ஒன்று இலங்கை நிலவரம் குறித்து ஆராயவுள்ளது.

# புலிகளின் விமானப்படைக்கு எரிபொருள் இறக்குமதி!

## வர்த்தகர் மீது பொலிசார் விசாரணை

தமிழீழ விடுதலைப் புலிகளின் விமானப்படைக்கு எரிபொருள் இறக்குமதி செய்ததாகக் கூறி கொழும்பு வர்த்தகர் ஒருவரிடம் சிறிலங்கா பொலிசார் தீவிர விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். சிறிலங்கா புலனாய்வுப் பிரிவினருக்கு இது தொடர்பான தகவல் கிடைத்ததாகவும் எதிர்வரும் நாட்களில் அந்த வர்த்தகர் கைது செய்யப்படக் கூடும் என்றும் பொலிசார் தெரிவித்ததாக கொழும்பு நாளேடு ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது. இந்த நடவடிக்கை மூலம் தமிழீழ விடுதலைப் புலிகளிடம் இரண்டு விமானங்கள் கொண்ட விமானப் படை இருப்பது உறுதிப்படுத்தப்பட்டுள்ளதாகவும் அந்த நாளேடு கூறுகிறது.யுத்த நிறுத்த ஒப்பந்தம் சீர்குலையும் நிலையில் இந்த எரிபொருட்களைக் கொண்டு விமானங்களை விடுதலைப் புலிகள் இயக்கக் கூடும் என்றும் கொழும்பு நாளேடு அச்சம் தெரிவித்துள்ளது.

# நினைவுக்கல் திரை நீக்கம்

முல்லைக் கடற்பரப்பில் கடந்த 13.03.1997 அன்று சிறிலங்கா கடற்படையினருடனான மோதலில் வீரச்சாவடைந்த வீரவேங்கை அருண்/ அருணண் (சித்திரவேல் சண்முகலிங்கம் சேனையூர் திருமலை த.முகவரி அன்புத் திட்டம் புதுக்குடியிருப்பு) என்பவரின் நினைவுக்கல் திரைநீக்கம் இன்று முள்ளிவளை மாவீரர் துயிலும் இல்லத்தில் பூரண இராணுவ மரியாதைகளுடன் இடம்பெறும். முன்னதாக இம் மாவீரின் திருவுருவப் படம் அவரின் தற்காலிக இல்லத்தில் நேற்று மாலை வைக்கப்பட்டது. இன்று காலை 10.00 மணிக்கு மக்களின் வணக்கத்திற்காக புதுக்குடியிருப்பு மாவீரர் மண்டபத்தில் வைக்கப்படும்.

## மின் விநியோகம் தடைப்படும்

(அலுவலகசெய்தியாளர்)

புதிதாக அமைக்கப்படும் கனகபுரம் வீதி உயர் மின்அழுத்தக் கம்பிகளை இணைக்கும் வேலைகள் நடைபெறவுள்ளதால் கிளிநொச்சிப்பகுதியில் இன்று காலை 9.00மணி தொடக்கம் காலை 4.00 மணி வரை மின் விநியோகம் தடைப் படும் என மின்சாரசபையினர் வாடிக்கையாளர்களுக்கு அறியத் தருகின்றார்கள்.

மேற்படி திருத்த வேலைகள் முடிவடைந்ததும் வழமைபோல் வழங்கப்படும் என்பது குறிப்பிடத்தக்கது.

## சார்ள்ஸ்..

கடத்தப்பட்டு கொலை செய்யப்பட்டார். இக் கொலையுடன் தொடர்புடையவர் என்ற சந்தேகத்தின் பேரில் யாழில் கோபி கைது செய்யப்பட்டார். இவர் அடையாள அணி வகுப்பிற்கும் உட்படுத்தப்பட்டார். எனினும் அடையாளம் காணப்படவில்லை.

## யுத்தநிறுத்த..

வேவு விமானம் வீழ்ந்து நொருங்கியது. புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசத்தில் இந்த விமானம் வீழ்ந்து நொருங்கியது. இதனால் சிறிலங்கா விமானப் படை ஒப்பந்த விதிகளைக் மதிப்பளிக்காமல் செயற்பட்டது உறுதிப்படுத்தப்பட்டது. இந்த நிலையில் இடம் பெற இருக்கும் இந்தச் சந்திப்பு முக்கியம் பெறுகிறது. இச் சந்திப்பில் தமிழீழ அரசியல் துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் உள்ளிட்ட குழுவினர் பங்கு கொள்வர். (லே)

# அம்பாறையில்முதலாவது துணைப்படை அணி பயிற்சி முடித்து வெளியேற்றம்

(அம்பாறை)

அம்பாறை மாவட்டத்தின் முதலாவது துணைப் படை தனது பயிற்சிகளை முடித்து நேற்று முன்தினம் வெளியேறியுள்ளது. இதன்படி முதற்கட்ட பயிற்சியை முடித்த 84 பேரைக் கொண்ட துணைப்படை அணி வெளியேறியுள்ளது. இவர்களின் பயிற்சி நிறைவு நிகழ்வு நேற்று முன்தினம் கஞ்சிகுடிச்சாறுப் பகுதியில் சிறப்புற நடைபெற்றது.

எல்லைப் படைகளின் தளபதி வீரா தலைமையில் நடைபெற்ற இந் நிகழ்வில், அம்பாறை மாவட்ட கட்டளைத் தளபதி கேணல் ராம், படையணித் தளபதி ஜனார்த்தனன், மாவட்ட அரசியல்துறை பொறுப்பாளர் தயாமோகன் ஆகியோர் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

இதேவேளை யாழ். மாவட்டத்திற்கான மக்கள் படைக்கட்டுமான பயிற்சித் திட்டத்தின் கீழ் எட்டாவது பயிற்சி அணி தனது பயிற்சிகளை முடித்து நேற்று வெளியேறியுள்ளது.

தமிழீழதேசியத்தலைவரின் வழிகாட்டலின் கீழ் தமிழீழத்தில் மக்கள் படைகளை உருவாக்கும் நோக்கில் சகல மாவட்டங்களிலும் மக்கள் படைக்கட்டுமானப் பயிற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன அந்த வகையில் யாழ். மாவட்டத்திற்கான படைக் கட்டுமான பயிற்சித் திட்டத்தின் கீழ் லெப். கேணல் குணா பயிற்சிப் பாசறையில் மக்கள் படைக் கட்டுமானப்பயிற்சி பெற்ற எட்டாவது படையணி நேற்றுப் பயிற்சியை முடித்து வெளியேறியது.

## கைக்குண்டுத்..

நிலையிலும் கூட தமிழ் மக்கள் எழுச்சி கொண்டு தமது தாயகம், சுயநிர்ணய உரிமை போன்றவற்றைக் கோரும் இத்தமிழ் தேசிய எழுச்சி நிகழ்வை கொண்டாடுவதற்கான ஏற்பாடுகளைச் செய்வதைப் பார்த்துக் கொண்டிருக்க முடியாதவர்களின் கோழைத்தனமான செயலே இக் கைக்குண்டு வீச்சு இச் செயலின் மூலம் தமிழ் மக்களின் உணர்வுகளை ,செயல்களை அடக்கி விட முடியும் என இவர்கள் நினைப்பது இவர்களின் தப்புக் கணக்கு ஆகும். இராணுவத்தினரின் அடிவருடிகளாக இருக்கும் ஆயுதக் குழுவினரே இராணுவத்தினரின் ஒத்துழைப்புடன் இச்செயலை செய்துள்ளனர். இவர்களின் சிந்தனையை சிதறடிக்க அனைத்து தமிழ் பேசும் மக்களும் இந் நிகழ்வில் கலந்து கொள்ள வேண்டும் என்றார். (10)

## இராணுவ..

களில் ஈடுபட்டிருந்ததாகவும், எனினும், அவர்கள் தேர்தல் கண்காணிப்புப் பணியில் ஈடுபட்டிருந்த போதும் வடக்கு, கிழக்கில் தேர்தல் நீதியான முறையில் நடைபெறவில்லையென கண்காணிப்பாளர்கள் கூறியிருந்த தாகவும். சிறி லங்கா முற்போக்கு முன்னணியின் சனாதிபதி வேட்பாளர் பீற்றர் நெல்சன் தாக்கல் செய்துள்ள மனுவில் குறிப்பிடப்பட்டுள்ளது. இதற்கமைய சிறிலங்கா இராணுவக் கட்டுப்பாடற்ற பகுதிகளில் வாக்களிக்க தடை விதித்து தேர்தல் ஆணையாளருக்கு உத்தரவிட வேண்டுமென்றும் அவர் அந்த மனுவில் மேலும் தெரிவித்துள்ளார்.

## தமிழ்...

வவுனியாவில் எடுக்கப்பட்ட தீர்மானங்களை வவுனியாநகர் மட்டக்களப்பு, கிளிநொச்சி, முல்லைத்தீவு, மன்னார், யாழ்ப்பாணம், திருகோணமலை ஆகிய மாவட்டங்களில் தமிழ் எழுச்சி நிகழ்வுகள் நடைபெற்றுள்ளமை தெரிந்ததே.

வவுனியாவில் கடந்த யூலை மாதம் 27 ஆம் நாள் தமிழ்தேசிய பேராளர்களால் எடுக்கப்பட்ட தீர்மானங்களை மீண்டும் வலியுறுத்தி வவுனியா மாவட்ட மக்கள் இந் எழுச்சி நிகழ்வை இன்று நடத்தவுள்ளனர்.

வவுனியா நகர சபை மைதானத்தில் இன்று பிற்பகல் 3.00 மணிக்குஅணி திரளும் தமிழ் மக்கள் தமிழ் தேசியத்தின் விடுதலைக்காக பொங்கி எழுந்து குரல் கொடுக்கவுள்ளனர்.

தமிழர் தாயகத்தில் இருந்து சிறிலங்காப் படையினர் வெளியேற வேண்டும், ஐரோப்பிய யூனியன் தமிழீழ விடுதலைப்புலிகளை வரவேற்பில்லை எனும் முடிவை விலக்கிக் கொள்ள வேண்டும் உட்பட பல்வேறு உணர்வுகளை எழுச்சி நிகழ்வில் மக்கள் வெளிப்படுத்தவுள்ளனர்.

வவுனியா இராணுவக் கட்டுப்பாட்டுப் பகுதியில் உள்ள மக்கள் இந் நிகழ்வில் பங்கு பற்ற வருகை தருவதற்காக 100 பேருந்துகள் சேவையில் ஈடுபட்டுள்ளன. இப் பேருந்துகள் மக்களை ஏற்றி வந்து வவுனியா நகர சபை மைதானத்தில் இறக்கிய பின் காமினி மகாவித்தியாலயத்தில் தரித்து நிற்கும்.

அதே போன்று விடுதலைப்புலிகளின் கட்டுப்பாட்டு பிரதேசத்திலிருந்து நிகழ்விற்காக வருகை தருபவர்களுக்கு ஓமந்தை மத்திய கல்லூரியில் மதிய போசனம் வழங்கப்படும் என ஏற்பாட்டாளர்கள் தெரிவித்தனர்.

வவுனியா நகர சபை மைதானத்தில் விசேடமாக அமைக்கப்பட்டுள்ள அரங்கில் நடைபெறவுள்ள தமிழ் தேசிய எழுச்சி நாள் நிகழ்வில் மக்கள் கலந்து கொள்வதற்காக வவுனியாவில் உள்ள உணவகங்கள் தவிர்ந்த அனைத்து வர்த்தக நிலையங்களும் மூடப்பட்டிருக்கும்.

அரச,அரசசார்பற்ற நிறுவனங்களில் கடமையாற்றுபவர்கள் இந் நிகழ்வில் பங்கேற்க வசதியாக அவை அரை நாளுடன் மூடப்படும் என அவர்கள் மேலும் தெரிவித்துள்ளனர்.

இதேவேளை வவுனியா தமிழ் தேசிய எழுச்சி நாள் குறித்து பொலிசாரை ஏற்பாட்டுக்குழு சந்தித்துக் கலந்துரையாடியுள்ளது. நேற்று பிற்பகல் 1.00 மணிக்கு இலங்கை போர் நிறுத்தக் கண்காணிப்புகுழுவின் வவுனியா மாவட்ட செயலகத்தில் நடைபெற்ற இச்சந்திப்பினை இலங்கை போர் நிறுத்த கண்காணிப்புக் குழுவினர் ஏற்பாடு செய்திருந்தனர். இச்சந்திப்பில் கலந்து கொள்ளுமாறு இலங்கைப் போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழு இராணுவத்திற்கு அழைப்பு விடுத்தபோதும் இராணுவத்தினர் இச்சந்திப்பில் கலந்து கொள்ளமறுத்துவிட்டனர்.

இச்சந்திப்பில் பொலிஸ் தரப்பில் வவுனியா பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி அபேசிங்க பண்டாரவும் ஏற்பாட்டுக் குழு சார்பில் வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர்களான சிவசக்தி ஆனந்தன் வினோநோகராதலிங்கம் ஆகியோரும் தமிழ்தேசிய எழுச்சிநாள் ஏற்பாட்டுக் குழுத்தலைவர் எஸ்.என். ஜி. நாதன், செயலாளர் கிறிஸ்தோபர், அகில இலங்கை தமிழ் காங்கிரஸின் வன்னி மாவட்டத் தலைவர் கே.ஏ. செந்தில் நாதன் ஆகியோரும் கலந்து கொண்டனர்.

இதன்போது A-9 பாதையை இன்று வியாழன் இரவு 11 மணிவரை திறக்குமாறும் தமிழ்தேசிய எழுச்சி நிகழ்வு நடைபெறும் இடத்திலோ அதனைச் சூழ்ஙள இடத்திலோ இராணுவச் சீருடையுடனோ, சிவில் உடையுடனோ இராணுவத்தினரோ, புலனாய்வுப் பிரிவினரோ, நடமாடக்கூடாது எனவும் முக்கிய சந்திகளில் பொலிசார் நிறுத்தப்பட்டு பாதுகாப்பு வழங்கப்படவேண்டும் என்றும், இராணுவத்தினர் எந்த விதமான கெடுபிடிகளையும் மேற்கொள்ளக்கூடாது எனவும் ஏற்பாட்டுக்குழுவினர் கேட்டுக் கொண்டதாக பாராளுமன்ற உறுப்பினர் சிவசக்தி ஆனந்தன் தெரிவித்தார். (10,21)

## தமிழ் தேசிய..

காரியாலயத்தினையும் ஒரு மதில் மட்டுமே பிரிக்கின்றமை குறிப்பிடத்தக்கது. சம்பவத்தில் யாரும் காயமடையவில்லை. சம்பவம் இடம்பெற்ற இடத்திற்கு வவுனியா நகர இராணுவத்தினரும் பொலிசாரும் சென்று பார்வையிட்டனர். இதனைத் தொடர்ந்து வன்னிதமிழ்தேசிய கூட்டமைப்பு பாராளுமன்ற உறுப்பினர் சிவசக்தி ஆனந்தன் மற்றும் தமிழ் தேசிய எழுச்சி மாநாட்டு குழுவினரும் சம்பவ இடத்தினை பார்வையிட்டனர் தாம் இந்தச் சம்பவம் காரணமாக அதிர்ச்சி அடையவில்லை என்றும் தொடர்ந்தும் தமிழ் தேசிய எழுச்சி மாநாட்டு நிகழ்வுகள் சிறப்பாக நடைபெற்று வருவதாக செயலணி குழுத் தலைவர் எஸ்.என்.ஜீ நாதன் தெரிவித்தார். (21,10)

## திருமலை...

சார்ந்த ஒரு மாவட்டமாகும். இது தனி ஒரு இனத்திற்கு மாத்திரம் உரியதல்ல. வடக்கு கிழக்கு மாகாணத்தில் ஏற்பட்டுள்ள பிரச்சினையை என்னால் மாத்திரமே தீர்க்க முடியும். ரணில் விக்கிரமசிங்க அவர்களால் முடியாது. அவர் விடுதலைப் புலிகளுடன் இணைந்து இந்த நாட்டினை துண்டாட முனைகின்றார். விடுதலைப் புலிகளுடன் நான் பேச்சு வார்த்தை மேற்கொண்டு இந்நாட்டில் அமைதி ஏற்படுத்துவதற்கு முயற்சிகள் மேற்கொள்வேன். விடுதலைப் புலிகள் ஒரு பயங்கரமான இயக்கத்தைச் சேர்ந்தவர்கள். அவர்களது நடவடிக்கைகள் காரணமாக ஐரோப்பிய நாடுகள் அவர்களைத் தடை செய்யும் நிலைக்கு வந்துள்ளது.

விடுதலைப்புலிகளின் நடவடிக்கைகள் காரணமாக எமது நாடு சின்னா பின்னமடைந்துள்ளது. இவற்றினை நீக்க வேண்டிய பொறுப்பு எங்களைச் சார்ந்தது. திருகோணமலை முற்று முழுதாக இராணுவக் கட்டுப்பாட்டு பிரதேசமாகும். அங்கு கடந்த சில நாட்களிற்கு முன்னர் விடுதலைப் புலிகளின் கொடி ஏற்றப்பட்டுள்ளது. இவை தவிர்க்கப்பட வேண்டும் எனவும் அவர் அங்கு மேலும் தெரிவித்திருக்கின்றார்.

தேர்தல் பரப்புரைக் கூட்டத்தில் பங்கேற்பதற்காக மகிந்த ராஜபக்ச வருகையை ஒட்டி திருகோணமலை நகரம் கடும் பாதுகாப்புக்கு உள்ளாக்கப்பட்டிருந்தது.

மக்கெய்சர் விளையாட்டரங்கிற்குச் செல் லும் பாதைகள் பொது மக்களின் போக்குவரத்துக்கு மட்டுப்படுத்தப்பட்டிருந்தது. கடலில் கடற்படையின் பீரங்கிப் படகுகளும் பாதுகாப்பில் ஈடுபட்டிருந்தன. உயரமான கட்டடங்களில் படையினர் காவலுக்கு நின்றிருந்தனர்.

## ஐரோப்பிய...

பிய ஒன்றிய பிரதிநிதிகளிடம் மனுக்கையளித்து விட்டு திரும்புகையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

ஐரோப்பிய ஒன்றிய பிரதிநிதிகளுடன் சுமார் 2.30 மணி நேரம் இந்தப் பேச்சுகள் இடம் பெற்றன. தமிழர் தரப்பில் பத்து பிரதிநிதிகள் கலந்து தமிழர்களின் நிலைப்பாட்டை தெளிவு படுத்தினர்.

விடுதலைப் புலிகளுக்கு ஐரோப்பிய நாடுகளும் ஐரோப்பிய ஒன்றியமும் பயணத்தடை விதிக்க வில்லை. தமிழீழ விடுதலைப் புலிகளுடன் உத்தியோக பூர்வ சந்திப்புக்களை மட்டும் மறு அறிவித்தல் வரை தவிர்த்துக் கொள்வதாக தெரிவித்துள்ளார்களே தவிர அவர்கள் எந்த ஒரு பயணத்தடையும் விதிக்கவில்லை என்று ஐரோப்பிய ஒன்றிய பிரதிநிதிகளால் எடுத்துக் கூறப்பட்டுள்ளது.

ஐரோப்பிய ஒன்றியம் இலங்கை சமாதான முயற்சிகளுக்கு முழுமையான ஒத்துழைப்பு வழங்கும் என்றும் இலங்கை சமாதான முயற்சிகளில் தாம் மிகவும் அக்கறை கொண்டுள்ளனர் என்றும் ஐரோப்பிய ஒன்றிய பிரதிநிதிகளால் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சந்திப்புக்களை ஐரோப்பிய ஒன்றிய நாடுகள் தவிர்ப்பதானது சமாதானப் பேச்சுகளில் ஈடுபடும் தமிழர் தரப்பின் பிரதிநிதிகளின் சமனிலைத் தன்மையினைப் பாதிக்கும் என்றும் சமாதானப் பேச்சுக்களைப் பாதிக்கும் அரச இனவாதிகளுக்கு பலம் சேர்ப்பதாக அமையும் என்றும் எதிர்காலத்தில் இத்தகைய நகர்வுகள் இருக்கக்கூடாது என்பதனையும் தமிழர் தரப்பினரால் முன்வைக்கப்பட்டுள்ளது என்று அவர் மேலும் தெரிவித்தார்.

இப்பத்திரிகை கிளிநொச்சி ஈழநாதம் பணிமனையில் 2005 ஆம் ஆண்டு ஒக்ரோபர் மாதம் 27 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.